This eBook can be downloaded from
www.vallalar.org

## முன்னுரை

**திருச்சிற்றம்பலம்**

**அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**
**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி**

# புத்தரும் வள்ளலாரும்

**சன்மார்க்க தேசிகன் ஊரன் அடிகள்**

வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே !

வாழையடி வாழை என வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவன் அன்றோ என்று வள்ளலார் பாடுகிறார்.

**வாழையடி வாழைஎன வந்ததிருக்கூட்ட**
**மரபினில் யான் ஒருவன்அன்றோ வகைஅறியேன் இந்த**

**ஏழைபடும் பாடுனக்குந் திருவுளச்சம் மதமோ**
**இது தகுமோ இதுமுறையோ இதுதருமந் தானோ**

**மாழைமணிப் பொதுநடஞ் செய் வள்ளால்யான் உனக்கு**
**மகனலனோ நீஎனக்கு வாய்த்ததந்தை அலையோ**
**கோழைஉல குயிர்த்துயரம் இனிப்பொறுக்க மாட்டேன்**
**கொடுத்தருள்நின் அருள்ஒளியைக் கொடுத்தருள்இப் பொழுதே.**

**திருஅருட்பா - 3803.**

வாழையடி வாழையாக வரும் திருக்கூட்ட மரபில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வந்தவர் திருவள்ளுவர். திருவள்ளுவர், திருமூலர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள், மாணிக்கவாசகர், பட்டினத்தார், அருணகிரியார், தாயுமானவர் என்று தொடர்ந்து வரும் இம்மரபைத்தான் வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபு என்று வள்ளற்பெருமான் குறிப்பிடுகிறார்.

நாயன்மார்கள் ஆழ்வார்கள் சித்தர்கள் முதலியோரெல்லாம் இம்மரபில் வருபவர்களே. வள்ளலாரின் சமகாலத்தவரான் இராமகிருஷ்ணரும் இம்மரபில் வருபவரே. வள்ளலாருக்குப் பின் வந்த அரவிந்தர், ரமணர் போன்றோரையும் இம்மரபிற் சேர்க்கலாம். மகாத்மா காந்தியடிகளையும் மகாகவி பாரதியாரையும் ஒருவகையில் இம்மரபில் சேர்த்துக் கூறலாம். காந்தியடிகள் பாரதியார்

இவ்விருவரின் ஆன்மீகம் அவர்களை இவ்வரிசையில் வைத்து எண்ணிப்பார்க்க இடமளிக்கிறது.

வள்ளுவருக்கு முன்னே இவ்வரிசையில் சேர்ப்பதற்குரிய பெருஞானிகள், வடக்கே தோன்றித் தமிழ்நாட்டிலும் பரவி, உலகளாவிய நிலையினரான மகாவீரரையும் புத்தரையும் சேர்க்கலாம். பின்னாளில் கடல் கடந்த நாடுகளில் தோன்றி உலகளாவிய நிலையில் விளங்கும் இயேசுவையும் நபிகளையும் கூட இம்மரபிற் சேர்க்கலாம். உலகில் தோன்றிய ஆன்மிக ஞானிகள் அனைவரும் வாழையடி வாழை, என வரும் திருக்கூட்ட மரபினரே.

ஆயினும் நாம் இங்கு ஒப்பாய்வுக்கென எடுத்துக்கொள்வதில், வள்ளுவர் முதல் வள்ளலார் வரை உள்ளவர்களில் திருவள்ளுவர்-திருமூலர்-சைவ சமயகுரவர் நால்வர்- தாயுமானவர்-என எழுவரை மட்டும் எடுத்துக் கொண்டுள்ளோம். வள்ளற்பெருமானது சமரச சுத்த சன்மார்க்க கொள்கைகளுக்கு ஒத்த, வள்ளற்பெருமானே ஓரிடத்திற் குறிப்பிட்டுப் போற்றியுள்ள மகாவீரர் புத்தர் ஆகிய இருவரையும் வள்ளுவருக்கு முன் வைத்துள்ளோம், வள்ளலாருக்குப் பின் காந்தியடிகளையும் பாரதியாரையும் சேர்த்துக் கொண்டுள்ளோம்.

எனவே இவ்வாழையடி வாழை ஒப்பாய்வு வரிசை

1. மகாவீரரும் வள்ளலாரும்
2. புத்தரும் வள்ளலாரும்
3. வள்ளுவரும் வள்ளலாரும்
4. திருமூலரும் வள்ளலாரும்
5. சம்பந்தரும் வள்ளலாரும்
6. அப்பரும் வள்ளலாரும்
7. சுந்தரரும் வள்ளலாரும்.
8. மாணிக்கவாசகரும் வள்ளலாரும்
9. தாயுமானவரும் வள்ளலாரும்
10. வள்ளலாரும் காந்தியடிகளும்
11. வள்ளலாரும் பாரதியாரும்.

எனப் பதினோரு நூல்களாக அமைகிறது.

கம்பரும் வள்ளலாரும் என்றொரு நூலை 2003-இல் வெளியிட்டுள்ளோம். சேக்கிழாரும் வள்ளலாரும் ஒரு சமயம் எழுதத் தொடங்கி இன்னும் முற்றுப்பெறாத நிலையில் உள்ளது.

இக்காலம் ஆய்வுக்காலம், அதிலும் ஒப்பாய்வுக் காலம் என்பதைக் கூறவேண்டியதில்லை. ஒப்பிட்டுப் பார்க்கக் கூடியவற்றை ஒப்பிட்டுப் பார்த்துப் பொதுக் கருத்துக்களையும் அனுபவங்களையும் அறிவது பல்வேறு சமரசங்களுக்கு ஏதுவாக இருக்கும்.

<u>புத்தரும் வள்ளலாரும்</u>

இந்தியாவில் முதன்முதலில் ஆன்மிகத்திற்கெனச் சங்கம் கண்டவர் பகவான் புத்தர். தமிழ்நாட்டில் முதன்முதலில் ஆன்மிகத்திற்குச் சங்கம் கண்டவர் வள்ளலார். இது ஒரு மிகப்பெரிய ஒப்புமை. இப்படி இன்றும் பற்பல ஒப்புமைகள் உள்ளன. அவற்றுட் சில இந்நூலில் ஆராய்ந்து விளக்கப் பெறுகின்றன.

பௌத்தத் தமிழ்நூல்களில் மிகவும் சிறந்தது மணிமேகலை. மணிமேகலை முழுவதிலும் அன்னதானத்தின் சிறப்பு ஆங்காங்கே அழுத்தந் திருத்தமாகக் கூறப்பெறுகிறது. வள்ளலாரும் அன்னதானத்தைப் பெரும்பணியாகக் கொண்டார்.

வள்ளற்பெருமான் திருவருட்பாப் பாடலொன்றில் அருகரையும் புத்தரையும் குறிப்பிட்டுப் போற்றியுள்ளார். இவையெல்லாம் இந்நூலில் விளக்கப் பெறுகின்றன.

அவ்வப்போது எமது பணிகளில் உதவிவரும் **திரு குறிஞ்சி ஞான செல்வநாதன்,** எமது தனிப் பணியாளர் **திரு.இரா.இராஜேந்திரன்** ஆகிய இருவரும் இரவு பகல் பாராது இந்நூல்களின் உருவாக்கத்தின்போது உடனிருந்து பல வகைகளில் உதவினர். நமதன்பர் ஆர்க்காடு நல்லாசிரியர் **புலவர் திரு. ச. சுந்தரேசனார்** அவர்கள் நன்கு மெய்ப்புத் திருத்தி உதவினார். எமது நூல்களை வழக்கமாக அச்சிடும் சிதம்பரம் சபாநாயகம் பிரிண்டர்ஸ் உரிமையாளர் **திரு.இரா.கௌதம சங்கர் மற்றுமவர் தம் துணைவியார் திருமதி ஜெயநந்தினி** அவர்களும் குறுகிய காலத்தில் அழகாக அச்சிட்டுதவினார். இவர்களுக்கு நம் அன்பான பாராட்டும் வாழ்த்துக்களும் உரிய.

அன்பர்கள் இவ்வரிசை நூல்களை வாங்கிப் பயின்று பயன் பெறுவார்களாக.

வாழ்க! வாழ்க!

வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே!

22/05/2005 **ஊரன் அடிகள்**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாதே!

நமோ புத்தாய

நமோ தர்மாய

நமோ ஸங்காய
நமோ தஸ்ஸ பகவதோ

ஸம்மா ஸம்புத்தஸ்ஸ

புத்தங் ஸரணங் கச்சாமி

தம்மங் ஸரணங் கச்சாமி

சங்கங் ஸரணங் கச்சாமி

துதியம்பி புத்தங் ஸரணங் கச்சாமி

துதியம்பி தம்மங் ஸரணங் கச்சாமி

துதியம்பி ஸங்கங் ஸரணங் கச்சாமி

ததியம்பி புத்தங் ஸரணங் கச்சாமி

ததியம்பி தம்மங் ஸரணங் கச்சாமி

ததியம்பி ஸங்கங் ஸரணங் கச்சாமி

பாணாதி பாதாவேரமணீ
ஸிக்காபதங் ஸமாதியாமி

அதின்னாதானா வேரமணீ
ஸிக்காபதங் ஸமாதியாமி

காமேஸு மிச்சாசாரா வேரமணீ
ஸிக்காபதங் ஸமாதியாமி

முஸாவதா வேரமணீ
ஸிக்காபதங் ஸமாதியாமி

ஸுராமேரய மஜ்ஜ பமாதட்டானா வேரமணீ
ஸிக்காபதங் ஸமாதியாமி

**அருள்வீற் றிருந்த திருநிழற் போதி**
**முழுதுணர் முனிவநிற் பரவுதும் தொழுதக**
**ஒருமன மெய்தி இருவினைப் பிணிவிட**
**முப்பகை கடந்து நால்வகைப் பொருளுணர்ந்து**
**ஓங்குநீர் உலகிடை யாவரும்**
**நீங்கா இன்பமொடு நீடுவாழ் கெனவே!**

**மருளறுத்த பெரும்போதி மாதவரைக்**
**கண்டிலமால் என் செய்கேம்யாம்!**
**பொருளறியு மருந்தவத்துப் புரவலரைக்**
**கண்டிலமால் என் செய்கேம் யாம்!!!**

**-வீரசோழியம், யாப்புப்படலம் 15-உரை**

### புத்த ஞாயிறு

புத்தர் பிறந்தார். உலகுக்கு ஒரு புதிய ஒளி பிறந்தது. புத்தரைப் **"புத்த ஞாயிறு"** என்று மணிமேகலை கூறுகிறது. ஓரிடத்திலன்று, பல இடங்களிற் கூறுகிறது.

புத்தரின் அவதார காலத்தில் உண்டாகும் நற்குறிகளை மணிமேகலை பின்வருமாறு கூறுகிறது.

**புத்த ஞாயிறு தோன்றுங்காலை**
**திங்களும் ஞாயிறும் தீங்குறா விளங்க**
**தங்கா நாண்மீன் தகைமையில் நடக்கும்**
**வானம் பொய்யாது மாநிலம் வளம்படும்**
**ஊனுடை உயிர்கள் உறுதுயர் காணா**
**வளிவலம் கொட்கும் மாதிரம் வளம்படும்**
**நளிஇரு முந்நீர் நலம் பலதரூஉம்**
**கறவை கன்றார்த்தி, கலநிறை பொழிம்**
**பறவைபயன் துய்த்(து) உறைபதி நீங்கா**
**விலங்கும் மக்களும் வெரூஉப்பகை நீங்கும்**
**கலங்கஓர் நரகரும் பேயும் கைவிடும்**
**கூனும் குறளும் ஊமும் செவிடும்**
**மாவும் மருளும் மன்னுயிர் பெறாஅ**

என்பது மணிமேகலை (12-அறவணர்த்தொழுத காதை, 86-98).

புத்தர் அவதாரம் செய்கிறபொழுது, சந்திரனும் சூரியனும் தீங்கில்லாமல், தீங்கு செய்யாமல் விளங்கும். நட்சத்திரங்களும் நல்ல நிலைகளில் இருக்கும். வானம் பொய்க்காது. மாநிலம் வளம் பெறும். உயிர்களுக்கு உறுகின்ற துயரங்கள்

நேராது. காற்று வலமாக வீசும். மலைவளம் பெருகும். கடல்வளம் பெருகும். கறவைப் பசுக்கள் கன்றுகளுக்கு ஊட்டியது போகப் கலம் நிறையப் பால் கறக்கும். பறவைகள் இருந்த இடத்திலேயே பயன் துய்க்கும், ஊரைவிட்டு வெளியே நீங்காது. விலங்குகளும் மக்களும் பகை நிங்கும் நரகவாசிகளும் பேய்களும் துன்பஞ் செய்ய மாட்டார்கள். கூன், குறள், குருடு, ஊமை, செவிடு முதலிய குறைப் பிறப்புகளை உயிர்கள் பெறாது (உலகத்தில் தோன்றாது).

## பொருளடக்கம்


1.ஆசியஜோதி.......................................................................7
2.இளமை வாழ்வு...................................................................11
3.இளைஞர் சித்தார்த்தரின் கருணை உள்ளம்..........................13
4.அலகில் பல்லுயிர் அறுவகைத்தாகும்.......................................26
5.அஷ்டாங்க மார்க்கம்...........................................................27
6.இரண்டாவது மாநாடு..........................................................33
7.அருள்-அன்பு-ஆருயிர் ஓம்பும் பகவன்.......................................34
8.அடுபோர்ச் செழிய! இகழாது வல்லே....................................43
9.ஆபுத்திரன், மணிமேகலை அன்னதானம்................................46
10.அருகர் என்பேன் புத்தர் என்பேன்......................................56


**மறஇருள் இரிய மன்னுயிர் ஏமுற**
**அறவெளியில் விரித்தாங்கு அளப்பில் இருத்தியொடு**
**புத்தஞாயிறு தோன்றுங் காறும்.**

**-21.கந்திற்பாவை வருவதுரைத்த காதை, 165-67**

**மறந்து மழைமறா மகத நன்னாட்டுக்(கு)**
**ஒருபெருந் திலகமென்(று) உரவோர் உரைக்கும்**
**கரவரும் பெருமைக் கபிலையம் பதியில்**
**அளப்பரும் பாரமிதை அளவன்று நிறைத்துத்**
**துளக்கமில் புத்தஞாயிறு தோன்றிப்**
**போதிமூலம் பொருந்தி வந் தருளி**

**-26. வஞ்சிமாநகர் புக்க காதை, 42-47**

## ஆசியஜோதி

உலகத்தை கண்டங் கண்டமாகப் பிரித்திருக்கிறார்கள். ஆசியாக் கண்டம், ஐரோப்பாக் கண்டம், அமெரிக்காக் கண்டம், ஆப்பிரிக்காக் கண்டம், ஆஸ்திரேலியாக் கண்டம் எனக் கண்டங்கள் ஐந்து.

ஐந்து கண்டங்களிலும் ஆசியாக் கண்டமே ஞான கண்டம். உலக தீர்க்கதரிசிகள் அனைவரும் ஆசியாக் கண்டத்தில் தான் தோன்றினார்கள். பிளாட்டோ அரிஸ்டாட்டில் கன்பூசியஸ் தோன்றியது. ஆசியாக் கண்டமே. இயேசுநாதரும் முகம்மது நபியும் தோன்றியது ஆசியாக் கண்டமே. ஆசியாக் கண்டத்திலும் மிக உயர்ந்த இடம் இமயமலை. இமய மலைச்சாரலில் புத்தர் தோன்றினார்.

புத்தரைப் பற்றி ஐரோப்பியர்கள் பல நல்ல நூல்களை எழுதியுள்ளார். சர்.எட்வின் அர்னால்டு (SIR EDWIN ARNOLD) என்னும் ஐரோப்பியர் 19-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டுகளில் The Light of Asia of the great (Mahabhinishkramana) என்றொரு ஆங்கில நூலை எழுதினார். உலகப் புகழ்பெற்ற நூல். புத்தரையும் பௌத்தத்தையும் அனைத்துலகுக்கும் அறிமுகப்படுத்திய நூல்.

எட்வின் அர்னால்டின் லைட் ஆப் ஆசியாவைத் தழுவிக் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை ஆசியஜோதி என்று ஒரு பாடல் நூலை இயற்றினார். எட்வின் அர்னால்டின் லைட் ஆப் ஆசியா உலகப் புகழ்பெற்றது போன்று, கவிமணியின் ஆசியஜோதி தமிழ்கூறும் நல்லுலகு முழுவதும் புகழ்பெற்றது.

புத்தஞாயிறு என்ற பெயரும் ஆசியஜோதி என்ற பெயரும் புத்தருக்குப் பொருத்தமாக அமைந்தன.

## புத்தர் பிறப்பு

கி.மு.ஆறாம் நூற்றாண்டில் வட இந்தியாவில் இமயமலைச் சாரலில் கபிலவாஸ்து என்ற நகரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த சாக்கிய குல மன்னன்சுத்தோதனன்,அவனுடைய பட்டத்தரசி மாயாதேவி ஆகியோரின் மகனாகப் புத்தர் பிறந்தார்.

புத்தர் பிறந்த நாள் வைகாசிப் பௌர்ணமி. பின்னாளில் அவர் ஞானம் பெற்ற நாளும் வைகாசிப் பௌர்ணமி. இறுதியில் பரிநிர்வாணம் அடைந்த நாளும் வைகாசிப் பௌர்ணமி.

பிறந்தநாள் வைகாசிப் பௌர்ணமி

ஞானம்பெற்ற நாள் வைகாசிப் பௌர்ணமி

பரிநிர்வாணம் அடைந்த நாள் வைகாசிப் பௌர்ணமி

இந்த அமைப்பு, இந்த ஒற்றுமை உலகில் புத்தரைத் தவிர வேறு யாருக்கும் அமையவில்லை. இது புத்தர் ஒருவருக்கே உரிய தனிச்சிறப்பு. புத்தர் பிறந்த

பெருநாளை “மதிநாள் முற்றிய மங்கலத்திருநாள்” என்று மணிமேகலை கூறுகிறது. மதிநாள் முற்றிய மங்கலத் திருநாளாம் வைகாசிப் பௌர்ணமி புத்தரின் பிறப்பு, ஞானம், பரிநிர்வாணம் ஆகிய மூன்றுக்கும் உரிய மங்கல நாளாக அமைந்தது.

வைகாசி பௌர்ணமியன்று விசாக நட்சத்திரம் வரும். பௌர்ணமியன்று விசாக நட்சத்திரம் வருவதால் அந்த மாதமே (திங்களே) வைகாசி எனப் பெயர் பெற்றது. புத்தர் விசாக நட்சத்திரத்தில் பிறந்தவர். நம்மாழ்வார் விசாக நட்சத்திரத்தில் பிறந்தவர். முருகப் பெருமானுக்கு விசாகப் பெருமாள் என்றொரு பேருண்டு. முருகனை விசாக நட்சத்திர ஜன்மன் என்பதுண்டு. பெம்மான் முருகன் பிறவான் இறவான் எனினும், விசாக நட்சத்திரத்தை உபசாரமாககி கூறுவதுண்டு. பிறவாயாக்கைப் பெரியோனாகிய சிவபெருமானுக்குத் திருஆதிரை நட்சத்திரம் கூறப்பெறுவதைப் போன்று எனலாம்.

விசாகம் ஞான நட்சத்திரம். ஞானிகள் பிறப்பதற்குரிய நட்சத்திரம். வைகாசி மாதமே ஞான மாதம். வைகாசி வசந்த காலம். திருக்கோயில்களில் வசந்தோற்சவம் வைகாசியில் கொண்டாடப்பெறுவதைக் காணலாம். ஒரு வைகாசி மாதம் 11-ஆம் நாளில் தான் வள்ளற்பெருமான் வடலூரில் சத்திய தருமச்சாலையைத் தோற்றுவித்தருளினார். அதில் அணையா அடுப்பை ஏற்றியருளினார்.

புத்தர் அவதரித்த அதே நாளில் அவரோடு தொடர்புடைய ஏழு ஜீவன்கள் பிறவி எடுத்தன என்பது புராண வரலாறு.

1. பின்னாளில் அவர் தவமிருக்கவும் ஞானம் பெறவும் நிழலளித்த போதிமரம்.
2. அவருக்கு மனைவியாகப் போகும் யசோதரை.
3. பொன்னும் மணியும் நிறைந்த நான்கு பொற்குடங்கள்.
4. அவரது பட்டத்து யானை.
5. கண்டகம் என்ற அவரது குதிரை.
6. அவரது தேர்ப்பாகன் சந்தகன்
7. இளமைத் தோழனான அந்தணச் சிறுவன் உதாயி

புத்தரின் வாழ்க்கையில் இவ்வேழு பெயர்களும் முக்கிய இடத்தைப் பெற்றவை.

புத்தரின் தாய் மாயாதேவி கருவுறும் நாளில் கனவொன்று கண்டார். ஆறு தந்தங்களுடைய அற்புதமான வெள்ளை யானை ஒன்று வானவீதியினின்றும் இறங்கி வந்தது. துதிக்கையில் ஒரு வெண்தாமரை மலரைப் பற்றி வீசிக்கொண்டே வந்த யானை, மாயாதேவி படுத்திருந்த கட்டிலை மும்முறை வலம் வந்து; துதிக்கையிலிருந்த வெண்தாமரை மலரால் மாயாதேவியின் வலது விலாப் புறத்தில்

ஒரு தட்டுத்தட்டிவிட்டு, ஒளிமயமான நட்சத்திர வடிவில் மாயா தேவியின் வலப்புற விலாவில் தாமரையால் தட்டிவிட்ட இடத்தின் வழியாக வயிற்றுனுட் புகுந்துவிட்டது. இதுவே மயாதேவி கண்ட கனவு. போதிசத்துவரே இவ்வாறு வந்து அன்னையார் கருவில் உருவானர்.

மண்ணுலக யானைகள் கருப்பு நிறம். விண்ணுலக யானைகள் வெள்ளை நிறம். திருஆனைக்காவில் வழிபட்ட யானை வெள்ளை யானை. வழிபட்டதும் வெள்ளை நாவல் மரத்தின் அடியில் இருந்த இறைவனை. இந்திரனின் யானை ஐராவதம் வெள்ளை யானை. முருகப் பெருமானது யானை பிணிமுகம் வெள்ளை யானை. அது இருபக்கமும் ஆயிரம் ஆயிரம் ஆக இரண்டாயிரம் தந்தங்களுடையது. சாதாரண யானைகளைவிட ஆயிரம் மடங்கு Thousand Elephant Power சக்தியுடையது என்று பொருள். சுந்தரரை அழைத்துச் செல்லக் கயிலையினின்றும் வந்த யானை வெள்ளானை. இவ்வாறு வெள்ளானை வரலாறுகள் பல உண்டு. வெள்ளை யானை அறிவுக்கும் ஆற்றலுக்கும் அறிகுறி.

புத்தர் தந்தையாரின் கருவிலிருந்து வந்தவர் அல்லர். தானே வந்து தாயின் மணிவயிற்றில் கருவாக உருவானவர். இயேசுநாதரும் தாயார் கன்னி மரியாளின் வயிற்றில் இவ்வாறே உருவானார் என்பது வரலாறு.

கருவுற்ற பத்தாம் மாதத்தில் அன்னை மாயா தேவியார் மகப்பெருவதற்காகத் தன் தந்தையாரின் நகராகிய தேவதாக நகரத்துக்குப் புறப்பட்டார். வழியில் உலும்பினி வனத்தில் தன் பரிவாரங்களுடன் தங்கி இளைப்பாறினார். உலும்பினி வனம் மன்னர் சுத்தோதனர் வசந்த காலங்களில் சென்று தங்கும் அழகிய உபவனம். சால விருட்சங்கள் அடர்ந்த சோலை.

அருகிலிருந்த சால மரத்தின் உயர்கிளையொன்றில் அற்புதமான மலர்க்கொத்தொன்று இருந்தது. மாயா தேவியின் கண்களில் பட்டது. அதைப்பறிக்க மாயாதேவி விரும்பினார். அது எட்டாத உயரத்தில் இருந்த கிளை. கைக்கு எட்டாது என்று அவளுக்குத் தெரிந்திருந்த போதிலும் மாயாதேவியின் கை தானே உயர்ந்தது. அவ்வுயரக் கிளையும் காற்றிலாடுவதுபோல் அதுவே தானாகத் தாழ்ந்து வளைந்து கொடுத்தது. மாயாதேவி வலக்கரத்தால் கிளையைப் பற்றினாள்.

அன்று வைகாசிப் பௌர்ணமிநாள். புத்தர் அவதரிக்கும் நேரம் வந்துவிட்டது. மாயாதேவியின் வயிற்றிலிருந்து வலது மருங்குல் (விலாப்பக்கத்தின்) வழியாகப் புத்தர் வெளிப்பட்டுப் பூமிக்கு வந்து தோன்றினார்.

**உலும் பிணிவனத்துள் ஒண்குழைத் தேவி**
**வலம்படு மருங்குல் வடுநோய் உறாமல்**
**ஆன்றோன் அவ்வழித் தோன்றினான்.**

என்பது விம்பசார கதைச் செய்யுள். புத்தர் அன்னையின் வயிற்றில் பத்து மாதங்கள் தங்கியிருந்து வளர்ந்தவராயினும் எல்லாரையும் போல் யோனிவாய்ப் பிறக்கவில்லை. வலது மருங்குல் வழி எப்படிப் புகுந்தாரோ அப்படியே வலது மருங்குல் வழி வந்து அன்னையின் விலாப்புறத்தின் வழியே வந்தவதரித்தார். தோன்றினார்.

புத்தர் அவதரித்தபின் அன்னை மாயாதேவியார் எழுநாள் மகிழ்ச்சியில் மலர்ந்திருந்து ஏழாம்நாள் ஆனந்தாதியசத்தால் இன்னுயிர் நீத்துத் துறக்கம் எய்தினார்.

**உலும்பினி வனத்து ஒண்குழைத்தேவி**
**வலம்படு மருங்குல் வடுநோ யுறாமல்**
**ஆன்றோன் அவ்வழித் தோன்றினான் ஆதலின்**
**ஈன்றோள் ஏழாம்நாள் இன்னுயிர் வைத்தாள்.**

என்பதும் விம்பசார கதைசெய்யுள்.

**புத்தன் தாய், நண்டு, சிப்பி, வாழை, புனமூங்கில்**
**கத்தும் விரியன் கடுஞ்சிலந்தி-இத்தனையும்**
**வேலாலும் வாளாலும் அன்றியே தாங்கொண்ட**
**சூலாலா தம்முயிர்க்குச் சோர்வு.**

என்பது உலோகவசனம் என்னும் நூல். நீலகேசி உரையில் இச்செய்யுள் காணப்படுகிறது.

**"இவண் பிறக்கின்ற காலத்து மாதாவினது வல**
**மருங்குலாற் பிறந்தான். அவளும் ஆறுநாள்**
**குற்றுயிரோடு கிடந்து ஏழாம்நாள் இறந்தாள். இது**
**புத்த மாதாக்கள் யாவர்க்கும் ஒக்கும்"**

என்பது நீலகேசி உரை. (குண்டலகேசி வாதச் சருக்கம்-41)

நீலகேசி சமணவாதநூல் ஆதலின் இவ்வாறு இலேசாகக் கூறுகிறது. மாயாதேவியார் நோய் நொம்பலம் எதுவுமின்றித் துறக்கம் சென்றார். உலகிலே வாழை, மூங்கில், நண்டு, சிப்பி முதலியவை சூல்கொண்டு கருவுயிர்த்தபின் மடிந்து விடுவதுபோலவே புத்தர்களைப் பெறும் அன்னையரும் பின்பு வாழ்வது வழக்கமில்லை என்பது பௌத்த மரபு.

புத்தர் பிறந்த இடத்தில் மாயாதேவிக்குக் கோயில் கட்டப் பெற்றது. அது இன்றும் உள்ளது.

சுத்தோதன மன்னனின் தலைநகரான கபிலவாஸ்துவும், புத்தர் அவதரித்த உலும்பினியும் இப்போது நேபாள நாட்டின் எல்லைக்குள் உள்ளன.

அரண்மனையில் பிறக்க வேண்டிய புத்தர் சாலமரத்தின் அடியில் பிறந்தார். போதிமரத்தின் அடியில் ஞானம் பெற்றார். சாலமரத்தின் அடியிலேயே பரிநிர்வாணம் அடைந்தார்.

மரத்தடியில் பிறந்தார்.

மரத்தடியில் ஞானம் பெற்றார்.

மரத்தடியிலேயே பரிநிர்வாண மடைந்தார்.

## இளமை வாழ்வு

### பெயர் சூட்டல்

புத்தர் பிறந்த உடனேயே பேசினார்!

புத்தராகி உலகத்தின் துன்பத்தை நீக்கப்போவதாக அறிவித்தார்.

பிறந்த உடனேயே எழுந்து நடந்தார்!

நான்கு திசைகளிலும் ஏழு ஏழு அடிகள் நடந்தார். அவர் அடிவைத்த இடங்களிலெல்லாம் பூமியிலிருந்த தாமரைகள் எழுந்து தோன்றி அவரது மலரடிகளைத்தாங்கின.

மன்னர் சுத்தோதனர் குழந்தைக்குச் சர்வார்த்த சித்தன் என்று பெயரிட்டார். எல்லாச் செல்வங்களையும் பெற்றவன் (சகல செல்வங்களையுமுடையவன்)என்பது அதற்குப் பொருள். சர்வார்த்த சித்திரஸ்து என்று பெரியோர்கள் வாழ்த்துவதைக் கேட்கலாம். சர்வார்த்த சித்தம் என்ற பெயரே சித்தார்த்தன் எனச் சுருக்கமாக வழங்கலாயிற்று.

கோதமன், கௌதமன் என்பது மரபுப் பெயர். புத்தன் என்பது பதவிப் பெயர். போதம் - ஞானம் (புத்தி). புத்தி (அறிவு) நிரம்பியவர், புத்தர். புத்தருக்குப் போதி சத்துவர் என்றும் பெயர். நாம் வழங்கும் இப்பெயர்களையெல்லாம் புத்தர் பயன்படுத்துவதில்லை. தன்னைக் குறிப்பிடும் போதெல்லாம். “ததாகர்”என்று குறிப்பிடுவதே அவரது வழக்கம்.

அன்னையார் மாயாதேவியின் இறுதி வேண்டுகோளின்படி அவரது சகோதரியும் புத்தரின் சிற்றன்னையுமான **கௌதமி**, குழந்தை புத்தரை வளர்க்கும் பேறு பெற்றார்.

### குழந்தை சித்தார்த்தரின் அற்புத ஆற்றல்

சித்தார்த்தரின் குழந்தைப் பருவத்தில் தலைநகர் கபிலவாஸ்துவில் பொன்னேர் பூட்டும் விழா நிகழ்ந்தது. மன்னர் சுத்தோதனர் முதல் ஏராகப் பொன் ஏர் பிடித்து உழுது, உழவு விழாவைத் தொடங்கிவைத்தார். ஆயிரம் ஏர்கள் அணிவகுத்து உழுதன. முன்னே மன்னனது ஏர், தங்கத்தாலான பொன்னேர். பின்னே வெள்ளியாலான நூற்றெட்டு ஏர்கள்.

உலகத்து விழாக்களில் மிகப் பழைமையானதொரு விழா ஏர் விழா. இந்தோனேஷியா போன்ற நாடுகளில் இப்போதும் அரசர் பொன்னேர் பிடித்து உழும் பொன்னேர் விழா நடைபெறுகிறது.

அன்று கபிலவஸ்துவில் நிகழ்ந்த பொன்னேர் விழாவில் கூடியிருந்த அனைவரும் விழாக்காட்சியைக் கண்டு களித்தனர். இன்னொரு அற்புதக் காட்சியும் அவர்களுக்காகக் காத்திருந்தது.

குழந்தை சித்தார்த்தரைக் கவனித்துக் கொண்டிருந்த செவிலியர்கள் மன்னரிடம் ஓடிச்சென்று, இங்கே பொன் ஏர் பிடித்து உழும் காட்சி ஒருபுறம் இருக்கட்டும். அங்கே இளவரசர் காட்சியின் அற்புதத்தை வந்து பாருங்கள் என்று கூவி அழைத்தனர்.

மன்னரும் மற்றையோரும் விரைந்து வந்து பார்த்தனர், சித்தார்த்தர் இருந்து இடத்தில் தரைக்கு மேலே அந்தரத்தில் அமர்ந்திருந்தார். தரைக்கும் அவருக்கும் யாதொரு பற்றுமில்லை. அந்தரத்தில் அவர் அமர்ந்திருந்தார். அவர் அமர்ந்திருந்த மரத்திற்கு நேர்மேலே காலைச்சூரியன், உச்சிச் சூரியனாய் நிழல் பரப்பிக் கொண்டிருந்தான். காலைச்சூரியனால் மர நிழல் மேற்குப்பக்கம் விழவில்லை. மரநிழல் சித்தார்த்தருக்குக் குடைபிடிப்பது போன்று சூரியன் நேர்மேலே உச்சியில் நின்றான்.

புத்தஞாயிருக்கு, காலை ஞாயிறு திசைமாறி மரநிழல் அளித்துப் புண்ணியங்கொண்டது. இவ்வற்புதக் காட்சியைக் கண்ட மன்னரும் மற்றையோரும் குழந்தை சித்தார்த்தரின் - வருங்கால புத்தரின் - பெருமை அறிந்து மகிழ்ந்தனர். மன்னர் சித்தார்த்தர் ஐயனே! உன் ஆற்றலையெல்லாம் என்னிடம் ஏன் காட்டுகிறாய், இவற்றையெல்லாம் கண்டு களிக்க உன் அருமை அன்பனை இப்போது இல்லையே என்று மனத்திற்குள் கூறி வருந்தினார்.

இவ்வாறு சித்தார்த்தரின் இளமைப் பருவத்தைப் பற்றிப் பற்பல கதைகள், எத்தனையோ கதைகள் இருக்கின்றன.

## சிறுவர் சித்தார்த்தரின் கல்விப் பயிற்சி
## ஓதாதுணர்தல்

பள்ளிப் பருவத்தில் சிறுவர் சித்தார்த்தர் விசுவாமித்தரரிடம் கல்விப் பயிற்சிக்கு அனுப்பப் பெற்றார். அரிச்சுவடிப்பாடம் தொடங்கும் போதே சித்தார்த்தர் முந்திக் கொண்டு, உலகத்திலுள்ள அறுபத்து நான்கு மொழிகளில் எனக்கு எந்தெந்த மொழிகளைக் கற்பிக்கப் போகிறீர்கள் என்று கேட்டு, பல மொழிகளின் எழுத்துக்களையெல்லாம் ஒப்புவிக்கத் தொடங்கிவிட்டார். எழுத்தை மட்டுமின்றி, எண்களைச் சொல்லிக்கொடுக்கத்தொடங்கியபோதும் குருவை விஞ்சிக் கொண்டு கோடிக்கு மேற்பட்ட எண்களை, பத்துகோடி, நூறுகோடி, ஆயிரங்கொடி, லட்சங்கோடி, கோடி கோடி, கோடாகோடி என்று அடுக்கடுக்காகச் சொல்லிக்கொண்டே போனார். எழுத்திலும் எண்ணிலும் மட்டுமின்றி பிற பல கலைகளிலும் குருவை விஞ்சிய சீடராக இருந்தார்.

எல்லாக் கலைகளிலும் முற்பிறப்பிலேயே தேர்ச்சி பெற்றிருந்த குழந்தை சித்தார்த்தரைக் குருநாதர்கள் வணங்கினார்கள். குருநாதர்களுக்கெல்லாம் குருநாதன் நீ என்று போற்றினார்கள். கல்விப் பயிற்சியில் மட்டுமின்றி, வில்வித்தை, வாள்வித்தை, குதிரையேற்றம், யானையேற்றம் முதலிய படைக்கலப்

பயிற்சிகளிலும், பயிற்றுவிப்பாரை விஞ்சி விளங்கினார். உடன் பயில்வோர்க்கெல்லாம் நீங்கள் கற்பியுங்கள், என்னைப் பொறுத்தவரை எனக்கு நானே பயிற்சியைப் பழகிக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டார்.

எண், எழுத்து, முதல், அரசகுலத்தாருக்குரிய போர்ப்பயிற்சி வரை அனைத்துக் கலைகளையும் ஓதாமல் உணர்ந்தார். கல்வியிலும் வீரத்திலும் சிறந்து விளங்கினார்.

வள்ளலார் ஓதாதுணர்ந்தவர் என்பது அவரது வாக்காகிய திருவருட்பாவாலும், வரலாற்றாலும் அறியப்பெறும். பகவான் புத்தரும் ஓதாதுணர்ந்தவரே, ஆசிரியரின்றிக் கல்வியையும் கலைகளையும் தாமே கற்றவர். புத்தரும் வள்ளலாரும் பிறவி ஞானிகள், ஓதாது உணர்ந்தவர்கள்.

## இளைஞர் சித்தார்த்தரின் கருணை உள்ளம்

வசந்த காலத்தில் ஒருநாள் மாலைப்போதில் அரண்மனைத் தோட்டத்தில் இளைஞர் சித்தார்த்தர் உலவிக்கொண்டிருந்தார். வானவீதியில் அழகாகப் பறந்து கொண்டிருந்த அன்னப்பறவைகளில் ஒன்று அம்பு தைத்துக் கீழே விழுந்தது. வெள்ளை அன்னத்தின் உடம்பெல்லாம் இரத்தச் சிவப்பாகி இருந்தது. சித்தார்த்தர் ஓடிச்சென்று எடுத்து அம்பை அகற்றி, இரத்தத்தைத் துடைத்து, பச்சிலைச் சாறுகளைத் தடவி, அன்புக்கரங்களால் ஒத்தடங் கொடுத்து அன்னப்பறவையின் துன்பத்தை ஆற்றிக் கொண்டிருந்தார்.

சித்தார்த்தருடைய தாய்மாமன் சுப்பிரபுத்தனின் மகன் தேவதத்தன். சித்தார்த்தரோடு ஒத்த வயதினன். கல்வியிலும் விளையாட்டிலும் உடல் கலந்து கொள்பவர்களிலொருவன். அன்பு, கருணை என்பது இன்னதென்றே அறியாத முரடன். அவனால் அம்பெய்து வீழ்த்தப்பெற்றதுதான் அரண்மனைத் தோட்டத்தில் வீழ்ந்த அன்னப் பறவை; சித்தார்த்தரால் காப்பாற்றிய அன்னப் பறவை. தேவதத்னுடைய ஆள் வந்து அன்னப் பறவையைக் கேட்டான். சித்தார்த்தர் கொடுக்க மறுத்து அனுப்பிவிட்டார்.

சிறிது நேரத்திற்குப்பின் தேவதத்தனே வந்து கேட்டான், சித்தார்த்தர் கொடுக்க மறுத்தார். என்னால் அடித்து வீழ்த்தப்பட்டது, எனக்கே சொந்தம், கொடுத்துவிடு என்று கேட்டான். உன்னால் அடித்து வீழ்த்தப்பட்டது இறந்திருந்தல் உனக்கே சொந்தமாகலாம். அது உயிரோடு என் தோட்டத்தில் வீழ்ந்தது. என்னிடம் அடைக்கலம் புகுந்தது. அதனை நான் காப்பாற்றினேன் ஆதலின் எனக்கே சொந்தம், உன்னிடம் கொடுக்க முடியாது என்று சித்தார்த்தர் வாதிட்டார்.

இருவரும் தோட்டத்துக்கு வெளியே அவ்வழியே சென்ற முதியவர் ஒருவரிடம் தங்கள் வழக்கைக் கூறினார்கள். அடிபட்ட அன்னப்பறவை இறந்திருந்தால் அடித்தவனுக்குச் சொந்தம், காப்பாற்றப் பெற்றுவிட்டதால் காப்பாற்றியவனுக்கே சொந்தம் என்று முதியவர் தீர்ப்பளித்தார். தேவதத்தன் மனவருத்தத்தோடு வேறு வழியின்றித் திரும்பிச் சென்றான்.

சித்தார்த்தர் சிலநாளில் அன்னப்பறவையின் புண்ணை முழுவதும் ஆற்றி, அதன் துன்பத்தைப் போக்கி,பின்னொரு நாள் வானவீதியில் வந்து அன்னப் பறவைகளின் கூட்டத்தோடு கூட்டமாகப் பறக்கவிட்டார். துன்பத்தோடு வந்த அன்னப் பறவை இன்பமாகப் பறந்து சென்றது.

புத்தர் சித்தார்த்தராக இருந்த இளம் பருவத்திலேயே அளவற்ற கருணை உள்ளத்தோடு திகழ்ந்தார். அதைக் காட்டும் முதல் நிகழ்ச்சி இது.

## மணவாழ்க்கை

சித்தார்த்தனுடைய பதினைந்தாம் வயதில் இளவரசுப் பட்டம் சூட்டினர். குளிர் காலத்தில் உறைவதற்கு ஒருமாளிகை, கோடை காலத்திற்கு உறைவதற்கு ஒரு மாளிகை என்று செல்வச் செழிப்பில் புத்தர் வளர்ந்தார்.

பதினாறாம் வயதில் திருமணம் நிகழ்ந்தது. கோலியநாட்டு மன்னன், சித்தார்த்தரின் அம்மாள் சுப்பிரபுத்தனின் மகள், தேவதத்தனின் தங்கை யசோதரை மணப்பெண்ணாக வாய்த்தார். பிறப்புகள் பலவற்றிலும் யசோதரையே தமக்கு மனைவியாக விளங்கினாள் என்று புத்தர் பெருமானே பிற்காலத்தில் கூறியுள்ளார். இல்லற வாழ்வு இனிது சென்று கொண்டிருந்தது.

## நான்கு காட்சிகள்

இளவரசர் சித்தார்த்தர் அரண்மனை விட்டுப் புறப்பட்டு வெளியே உலாவச் சென்றார். நீண்டதூரம் சென்றதும் வயது முதிர்ந்த ஒருவர் தள்ளாடித் தள்ளாடி நடந்து செல்வதைக் கண்டார். தேர்ப்பாகனிடம் விசாரித்தார். அதுதான் மூப்பு என்று அவன் கூறினான். மூப்பைப் பற்றிய சிந்தனை சித்தார்த்தரைப் பற்றிக்கொண்டது. எல்லார்க்கும் இப்படி மூப்பு வரும், தமக்கும் ஒருநாள் மூப்பு வரும் என்று எண்ணினார். தேரைத் திருப்பச் சொல்லி அரண்மனைக்குத் திரும்பினார்.

மற்றொரு நாள் உலாவச் சென்றபோது பிணியாளன் ஒருவனைக் கண்டார். தேர்ப்பாகனிடம் விசாரித்தார். பிணியைப் பற்றி அவன் கூறினான். முதலில் மூப்பு வருகிறது. மூப்பைத் தொடர்ந்து பிணி வருகிறது என்று எண்ணினார். தமக்கும் ஒருநாள் வரக்கூடும் என்று எண்ணினார். பிணியைப் பற்றிய சிந்தனையில் அவர் மனம் ஆழ்ந்தது. தேரைத் திருப்பு என்று கூறி அரண்மனைக்குத் திரும்பினார்.

இன்னொரு நாள் உலாவப் புறப்பட்டார். அன்று, இறந்துபோன ஒருவரை மற்றவர்கள் தூக்கிச் செல்லும் காட்சியைக் கண்டார். என்ன இது என்று தேர்ப்பாகனை வினவினார். பிணத்தைத் தூக்கிச் செல்கிறார்கள் என்று கூறி அக்காட்சியைச் சந்தகன் விவரித்தான். செத்த பிணத்தைச் சாகும் பிணங்கள் தூக்கிச் செல்கிறார்கள். எல்லாருக்கும் இப்படி ஒரு சாவு வரும். முதலில் மூப்பு வந்தது, பின்னர் பிணிவந்தது, மூன்றாவதாக, முடிவாக இப்போது சாக்காடு

வந்திருக்கிறது என்று எண்ணினார். மூப்பு-பிணி-சாக்காடு ஆகியவற்றின் துன்பம் அவருடைய உள்ளத்தைத் துளைத்தது. இவற்றிலிருந்து மனிதகுலம் என்று மீள்வது என்று கருதினார். சந்தகா! தேரைத் திருப்பு என்று அரண்மனைக்குத் திரும்பினார். சிலநாள் வெளியே செல்லாமல், அரண்மனையிலேயே சிந்தனையில் காலங்கழித்தார்.

நான்காவதாக ஒருநாள் உலாவப் புறப்பட்டார். அங்கு ஒரு புதிய காட்சியைக் கண்டார். காவி உடை அணிந்து துறவு மெல்லென அமைதியாக நடந்து சென்று கொண்டிருப்பதைக் கண்டார். சந்தகா! இவர் யார் ! என்ன இப்படி இருக்கிறார் என்று தேர்ப்பாகனை விசாரித்தார். அவர் துறவி என்பதையும், உலகத் துன்பங்களையெல்லாம் துறந்து பற்றற்ற வாழ்க்கை மற்றவர்களுக்காகவே வாழ்கிறார், அதுதான் துறவு என்று அவன் துறவியின் பெருமையை விவரித்தான், ஆ! அப்படியா! உலவச் சென்றது போதும், தேரைத் திருப்பு என்று அரண்மனைக்குத் திரும்பினார்.

அரண்மனை வாயிலைக் குறுகியதும், அங்கிருந்தவர்கள் இளவரசியார் யசோதரை ஓர் அழகிய ஆண் குழந்தையைப் பெற்றெடுத்திருக்கிறார். இளவரசருக்கு ஒரு மகன் பிறந்திருக்கிறான் என்பதைத் தெரிவித்தார்கள். எனக்கு ஒரு “இராகுலன்“ பிறந்திருக்கிறான் என்று சித்தார்த்தபுத்தர் கூறினார், குழந்தைக்கு இராகுலன் என்று பெயர் சூட்டினர். இராகுலன் என்ற பெயருக்குப் பலரும் பலவாறு பொருள் கூறுவர். தனக்கு ஒரு பந்தம் தளைவிலங்குபோன்றவன் என்று சிலர் பொருள் கூறுவர். என் மதியை விழுங்க வந்த இராகு (பாம்பு) போன்றவன் என்று வேறு சிலர் கூறுவர்.

சித்தார்த்த புத்தருக்கு இப்போது அகவை (வயது) இருபத்தொன்பது. அவர் கண்ட நான்கு காட்சிகள் - மூப்பு, பிணி, சாக்காடு, துறவு - அவரைத்துற வுக்குத்தூண்டின. மூப்பு பிணி சாக்காடு நீங்க வேண்டுமானால் உலக இன்பங்களைத் துறந்தே ஆகவேண்டும் என்று ஒரு முடிவுக்கு வந்தார். இராகுலன் பிறப்பும் அதனோடு சேர்ந்து கொண்டது. அவரது சிந்தனை முழுவதும் துறவைப் பற்றியதாகவே இருந்தது. இனி, செயற்படுத்த வேண்டியதுதான்.

## <u>பெருந்துறவு</u>

## <u>மகாபி நிஷ்கிரமணம்</u>

அன்று ஆனித்திங்கள் வெள்ளுவாநாள் (ஆஷாட பௌர்ணமி). நள்ளிரவு. நகர மக்களெல்லாம் கண்ணுறங்குகிறார்கள். சித்தார்த்தபுத்தர் மட்டும் உறங்காதே விழித்திருந்தார். அவருக்கு உறக்கம் வரவில்லை. துறக்கும் நேரம் வந்தது.

வழக்கம்போல் ஓயாது ஆடல் பாடல்களில் ஈடுபட்டிருந்த அந்தப்புரத்து மகளிர் அப்படி அப்படியே உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்தனர். ஆடல் மகளிர்கள் உறங்கிக் கொண்டிருந்த அலங்கோல நிலையைக் கண்டார். வாரிய கூந்தல் கலைந்து புரள, உடுத்திய துகில்கள் புறம்போக, மார்பகங்கள் திறந்தபடி, அங்காந்த வாயுடன் கைகளையும் கால்களையும் தாறுமாறாக வீசிய நிலையில் ஆழ்ந்த உறக்கத்தில் அமுந்திக் கிடப்பதைக் கண்டார். வீணை வாசித்தவர்கள்

தந்தியிலிருந்து விரல்களை எடுக்கவில்லை. குழல்வாசித்தவர்கள் அதை அதரத்தில் வைத்தவாறு துயின்றனர். மத்தளம் வாசித்தவன் அதை வருடியபடியே கிடந்தான்.

சித்தார்த்தபுத்தர் இந்தக் காட்சிகளையெல்லாம் கண்டார். ஒரு பிணக்காடு போல அவருக்குத் தோன்றிற்று. பகலில் இருந்த நிலை என்ன? இரவு உறக்கத்தில் இருக்கும் நிலை என்ன? என்றெல்லாம் சிந்தித்தார்.

வீடு தீப்பற்றி எரிவதை அறிந்த ஒருவன் அந்த ஆபத்திலிருந்து தப்பி ஓட எவ்வாறு பரபரப்புக் கொள்வனோ, அவ்வாறே அவரும் அரண்மனையை விட்டு வெளியேறத் துடித்துக்கொண்டிருந்தார்.

இளவரசி யசோதரை ஏதோ கனவு கண்டு வாய்வெருவினாள். அவள் படுத்திருந்த அறைக்குச் சென்று பார்த்தார். யசோதரை அயர்ந்த தூக்கத்தில் இருந்தாள். அவளது வலது கை அணைத்த படி இராகுலன் படுத்திருந்தான். அன்பு மனைவி யசோதரையையும், அன்புக் குழந்தை இராகுலனையும் ஒரு முறை ஏற இறங்கக் கண்குளிரப் பார்த்தார். என் அன்புச் செல்வங்களே! உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்! உங்களுக்காகவும் உலக மக்கள் அனைவருக்கும் என்னுடைய இந்த ஆன்ம யாத்திரையை அரண்மனைக்கு வெளியே பரந்த வெளியில் மேற்கொள்ளப்போகிறேன், விடைகொடுங்கள்! என்று எண்ணியவாறே அவ்விடம்விட்டு நகர்ந்து அறைக்கு வெளியே வந்தார்.

அரண்மனை வாயிலுக்கு வந்தார். குதிரைப்பாகன் சந்தகனை அழைத்தார். சந்தகா! கண்டகக் குதிரையைக் கொண்டுவா! என்றார். சந்தகன் கண்டகத்தைக் கொண்டு வந்து நிறுத்தினார். சித்தார்த்தபுத்தர் அந்த வீரவெண்புரவியின் மீது ஏறி அமர்ந்தார். பின்னே சந்தகனும் தொத்திக் கொண்டான். அரண்மனைக்கு வெளியே கானகத்தை நோக்கிப் பறந்தார்.

ஆடிப் பௌர்ணமி போதி சத்துவர் மாயாதேவியின் வயிற்றில் உட்புகுந்த அதே நாள். இன்று அரண்மனையைத் துறந்து வெளியேறுகிறார். நள்ளிரவு நேரம், கடுகிச் செலுத்தப்பட்ட கண்டகக் குதிரையின் குளம்படி ஓசை யாருக்கும் கேட்கவில்லை. கோட்டைக் கதவுகள் தாமாகவே திறந்துகொண்டன. அரண்மனைக் காவலர்கள் கோட்டைக்காவலர்கள் அங்கங்கே துயின்று கொண்டிருந்தார்கள். எல்லாம் தெய்வீக ஏற்பாடு.

நகரத்தைக் கடந்து வெளியே வந்ததும், இருபத்தொன்பது ஆண்டுகளாக அடைபட்டுக் கிடந்த அந்த நகரத்தை ஒருமுறை திரும்பிப் பார்த்தார். பிறவிப் பிணிக்கு மருந்தைக் கண்டுபிடித்தல்லது நகரத்துகுத் திரும்புவதில்லை என்று சபதமிட்டார்.

கிழக்கு வெளுக்கும் நேரம். பலகாத தூரம் விரைந்து சென்ற குதிரை அநோமை நதிக்கரைக்கு வந்தது. அங்கிருந்து ஒருதாவில் ஆற்றைக்கடந்து அக்கரையில் நின்றது. கபிலவாஸ்துவிலுள்ள சாக்கிய மக்கள் அறிந்து கொள்ள இயலாத தூரம் கடந்துவிட்டோம் என்று கண்ட சித்தார்த்தபுத்தர் குதிரையிலிருந்து கீழே இறங்கினார். குதிரையை அன்பாகத் தட்டிக் கொடுத்தார். என் அன்புக் கண்டகமே! அசுவ திலகமே!! உன் அன்பு என்பெருந்துறவுக்கு ஆதரவாக

இருந்தது. அடுத்த பிறப்பில் நீ இருக்க வேண்டிய இடத்தில் இருப்பாய். போதி சத்துவரைச் சுமந்த உனக்குத் தேவலோகத்தில் நல்ல இடங்கிடைக்கும் என்று பாராட்டி வாழ்த்தினார். கண்டகம் சோகத்தால் வாடியது. இரக்கம் கலந்த பார்வையுடன் போதிசத்துவரை ஒருமுறை நோக்கிவிட்டு அவர் பாதங்களை நக்கியது. அதன் கண்ணீரால் பாதங்களைக் கழுவியது.

சோகத்தால் நிலை தளர்ந்தான் சந்தகன். இளவரசே! தங்களை விட்டு விட்டுத் தனியாக நான் நகரத்துக்கு எப்படித் திரும்புவேன். மன்னருக்கும், தங்கள் தேவியாருக்கும் நான் என்ன பதில் சொல்லுவேன்? தங்கள் சிற்றன்னைக்கு நான் என்ன சொல்ல முடியும்? தங்களுடன் சேர்ந்து துறவியாகி உடன் வருகிறேன், என்றான்.

சித்தார்த்தபுத்தர் அவனைத் தடுத்து, சந்தகா! நீ நகரத்திற்குத் திரும்பவேண்டியது அவசியம். சென்று, மன்னனுக்கும் மற்றுமுள்ள அனைவருக்கும், நான் துறவியாகிவிட்டேன் என்ற செய்தியைச் சொல்ல வேண்டும். பின் ஒரு காலத்தில் என் கூட்டதில் நீயும் வந்து சேரலாம் என்று சொல்லித் தன் மணிமுடியைக் கழற்றிச் சந்தகன் கையிலே கொடுத்தார். வாளை உருவித் தலைமயிரை அரிந்து வானில் பறக்க விட்டார். மேலாடையையும், ஆபரணங்களையும் களைந்து, அவற்றோடு உடைவாளையும் சந்தகன் கையிலே கொடுத்தார். எல்லாவற்றையும் சந்தகன் கை கனக்க வாங்கிக் கொள்ள வேண்டியதாயிற்று. சித்தார்த்த புத்தரின் உடலும் உள்ளமும் இலேசாயின.

சந்தகா!.. நாம் பிரியவேண்டிய சமயம் வந்துவிட்டது. எனக்கு விடைகொடு, கபிலவாஸ்துவில் எல்லாருக்கும் நல்ல வார்த்தை சொல்லித் தேற்றுவது உன் பொறுப்பு, நான் சென்று வருகிறேன் என்று கூறிக், கண்களில் நீர் பெருக நின்ற அவனிடம் பிரியாவிடை பெற்று அவ்விடத்தை விட்டுக் கானகத்தினூடை விரைவாக நடந்தார். புத்தரின் நெடும்பயணம் பாதயாத்திரை தொடங்கியது.

சந்தகன் ஆற்றொணாத் துயரத்தோடு அக்காட்சியைப் பார்த்தவாறே உயிரற்ற சடலம் போல நின்றான். திரும்பிப்பார்த்த போது குதிரை கண்டகம் சோர்ந்து விழுந்து உயிர்துறந்திருப்பதைக் கண்டான்.

கண்டகக் குதிரை சுவர்க்கம் புகுந்தது. இளவரசர் சித்தார்த்தர் புத்தபிக்குவாய்க் கானகத்தினூடே நடந்தார். குதிரைப்பாகன் சந்தகன் அரச சின்னங்களான முடியும் வாளும், பிற ஆடை ஆபரணங்களும் கை கனக்கக் கால்சோரக் கண்களின் நீர்பெருகக் கபிலவாஸ்துவை நோக்கி நடந்தான்.

புத்தரின் இப்பெருந்துறவு **“மகாபி நிஷ்கிரமணம்“** என்று சொல்லப்பெறுகிறது.

புத்தர் இளவரசைத் துறந்தார். பின்னாளில் பெற இருந்த அரச பதவியைத் துறந்தார். தமிழில் மகாராஜா துறவு என்றேஒரு நூல் உண்டு. அமைச்சராக இருந்த மாணிக்க வாசகர் துறவு பூண்டார். கப்பல் வாணிகர் பட்டினத்தார் துறவு பூண்டார். இவையெல்லாம் பெருந்துறவுகள். துறவின் பெருமையைக் காட்டும் பெருந்துறவுகள்.

## கொலை வேள்வியைத் தவிர்த்தது

துறவியாகிக் காட்டினூடே ஞானத்தைத் தேடிச் சென்ற புத்தர் காடுகரை நாடு நகரம் எனப் பல இடங்களிலும் சுற்றித் திரிந்தார்.

இராஜ கிருக நகருக்கு அருகே ஒரு ஆட்டு மந்தை ஓட்டிச் செல்லப்படுவதைப் பார்த்தார். ஆட்டு மந்தையில் கடைசியாக ஒரு குட்டி ஆடு நொண்டி நொண்டி நடந்து வருவதைக் கண்டார். ஓடிச்சென்று அதைத் தூக்கித் தோளின் மீது போட்டுக்கொண்டு ஆட்டு மந்தையுடன் நடந்தார். ஆட்டுமந்தை எங்கே போகிறது. என்று விசாரித்தார். மன்னர் பிம்பிசாரரின் யாகத்திற்குப் போகிறது என்று சொல்லக் கேட்டார். நானும் யாகத்தைக் காண வருகிறேன் என்று உடன் சென்றார்.

பிம்பிசாரனின் வேள்விச் சாலையில் மன்னனுக்கும் வேதியர்களுக்கும் வேள்வியில் உயிர்க்கொலை செய்ய வேண்டாம் என்று அறிவுரை கூறினார். யாகங்களால் மன்னர்களுக்குப் பெருமை, மறையோர்களுக்குப் புண்ணியம், பலியிடப்பெறும் உயிர்களுக்குச் சுவர்க்கம் என்று வேள்வி செய்வோர் வாதிட்டனர். யாகத்தில் பலியிடுவதால் ஆடுகளுக்கு சுவர்க்கம் கிடைக்கும் என்றால் நாமே பலியாகி சுவர்க்கம் பெறலாமே, நம்மிடம் அன்புடைய தாய் தந்தையரைச் சுவர்க்கம் புகச் செய்யலாமே, ஏன் இந்த வாயில்லாப் பிராணிகளைச் சுவர்க்கத்திற்கு அனுப்பவேண்டும் என்று புத்தர் கேட்டார். நீண்ட வாக்குவாதம் நிகந்தது. உயிர்க்கொலையின் பாவத்தையும் உயிரைக்காப்பாற்றும் புண்ணியத்தையும் புத்தர் பலவாறு விளக்கியருளினார். கருணாமூர்த்தியாகிய புத்தரின் முகம் வேள்வித் தீயைவிட மிகுதியாகப் பிரகாசிப்பதை அங்கிருந்தோர் அனைவரும் கண்டனர். புத்தரின் அற உபதேசம் மன்னனின் மனத்தில் தைத்தது. வேள்வியில் பலியிடுவதை நிறுத்த ஆணையிட்டான். “ இனி நாடெங்கும் கொலை தவிர்க்கும்படி நாளையே பறையறிவிப்பேன்” என்று கூறினான். வேதியர்களும் ஓமத்தீயை அவித்துவிட்டு வேள்வியை நிறுத்திக்கொண்டனர்.

மந்தை மந்தையாக ஆடுகளைப் பலிகொடுக்கும் பழக்கம் புத்தரால் தவிர்ந்தது.

புத்தர் ஆட்டுக்குட்டியைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு நடந்த அற்புதக் காட்சி, புத்தரின் வரலாற்றிலேயே அனைவராலும் சிறப்பாகக் கூறப்பெறும் காட்சி, இவ்வாறே இயேசுநாதர் ஆடுமேய்த்ததையும் கூறுவர்.

வள்ளலாருடைய திருவுருவப் படத்திலும் பின்புறத்தில் ஆட்டுக்குட்டி ஒன்று புல்மேய்ந்து கொண்டிருக்கும் காட்சியைக் காணலாம். ஞானசபை தருமச்சாலைக் கட்டிடங்கள் சித்திவளாகத் திருமாளிகை ஆகியவற்றுடன் ஆட்டுக்குட்டியும் இருக்கும். வள்ளற் பெருமான் சித்திவளாகத்தில் எழுந்தருளியிருந்த காலத்தில் பெருமானது உபதேசங்களைப் பலரும் வந்திருந்து கேட்பார்கள். நொண்டி ஆட்டுக்குட்டி ஒன்றும் வந்து ஒருபக்கம் இருந்து கொண்டு செவிகளைச் சாய்த்துக் கேட்டுக் கொண்டிருக்குமாம். வள்ளற்பெருமான் தமக்குக் கொண்டுவரப் பெறும் உணவை அந்த நொண்டி ஆட்டுக்குட்டிக்கும், நொண்டி வாத்தியார் என்பவருக்கும் கொடுப்பாராம். வள்ளற்பெருமானது உபதேசங்களைக் கேட்ட, பிரசாதத்தை அருந்திய அந்த நொண்டி ஆட்டுக்குட்டிதான் வள்ளலார் படத்திலும் இடம்

பெற்றிருக்கிறது (முகப்பில் படம் காண்க) வள்ளற்பெருமான் படத்தில் ஆட்டுக்குட்டியைக் காணும்போது நமக்குப் புத்தர்தோள் ஆட்டுக்குட்டி நினைவுக்கு வரும்.

## ஞானம் பெற்றது

**அருள்வீ ற்றிருந்த திருநிழற் போதி**
**முழுதுணர் முனிவ! நிற்பரவுதும் தொழுதக**
**ஒருமனம் எய்தி இருவினைப் பிணிவிட்டு**
**முப்பகை கடந்து நால்வாய்ப் பொருளுணர்ந் (து)**
**ஓங்குநீர் உலகிடை யாவரும்'**
**நீங்கா இன்பமொடு நீடுவாழ்கெனவே!**

**போதி மேவினை! புன்மை அகற்றினை!**
**சோதி வானவர் தொழ எழுந் தருளினை!**
**ஆதிநாத நின் அடியினை பரவுதும்!**

**மருள் அறுத்த பெரும்போதி மாதவரைக்**
**கண்டிலனால்! என் செய்கோ யான்!**
**அருள் இருந்த திருமொழியால் அற வழக்கங்**
**கேட்டிலனால்! என் செய்கோ யான்!**
**பொருள் அறியும் அருந்தவத்துப் புரவலரைக்**
**கண்டிலனால் என் செய்கோ யான்!**

இருபத்தொன்பதாம் அகவையில் துறவு பூண்ட புத்தர் ஆறு ஆண்டுகள்,ஆறு ஆண்டும் அருந்தவ மியற்றி முப்பத்தைந்தாம் அகவையில் ஞானம் பெற்றார். முதலில் பல இடங்களுக்கும் சென்று பலரைக் கண்டு ஞானமார்க்கம் பற்றி உசாவினார், உரையாடினார். யாரும் எதுவும் அவருக்குத் திருப்தியாக அமையவில்லை. இறுதியில் தாமே தவஞ்செய்து சொந்தச் சிந்தனையால் ஞானம் பெறுவது என்று முடிவுக்கு வந்தார்.

மகதநாட்டில் உருவேலா வனத்தில் நைரஞ்சரை நதியின் கரையில் ஓர் பெரிய அரச மரத்தின் அடியில் அமர்ந்து தவஞ் செய்யத் தொடங்கினார். தொடக்கத்தில் மிகக் கடுந்தவத்தை மேற்கொண்டார். உணவு உறக்கம் முதலியவற்றைக் குறைத்து உடம்பெல்லாம் தசைவற்றத் தவஞ்செய்தார். வயிறு குழிந்து முதுகெலும்போடு ஒட்டிப் போயிற்றாம். அவ்வளவு கடுமையான தவ முயற்சிகளில் ஈடுபட்டார். தசையெலாம் வற்ற, நரம்புகளெல்லாம் மேலெழுந்து தெரிய, எலும்புக்கூடாகக் கடுந்தவமியற்றியதைப் பற்றி நூல்களில் விரிவாகக் கூறப்பெற்றுள்ளன.

திருமூலர் திருமந்திரத்தில் அன்புடைமை என்னும் அதிகாரத்தில் ஒரு பாட்டு உண்டு.

**என்பே விறகா(ய்) இறைச்சி அறுத்திட்டுப்**
**பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்**

**அன்போ டுருகி அகங்குழைவார்க் கன்றி**
**என்போன் மணியினை எய்த ஒண்ணாதே.** -272

புத்தரின் கடுந்தவத்தை நினைக்கும்போது இத்திருமந்திரப் பாடல்தான் நினைவுக்கு வருகிறது. புத்தரின் கடுந்தவத்தை எண்ணிப் பாடப்பெற்ற பாடல்போலவே தோன்றுகின்றது.

உடலை வாட்டி வருத்தித் தவஞ்செய்தால் பயனில்லை. உள்ளத்தைச் செம்மைப்படுத்தி மனோமுயற்சிகளால் ஞானம் பெறுவதே சிறந்த வழி என்று புத்தருக்குத் தோன்றிற்று. காய், கனி, கிழங்கு போன்றவற்றைத் தேவையான அளவுக்கு உண்டு. உடலை மிகவும் வருத்தாமல், உள்ளத் தவத்தை மேற்கொண்டார். புத்தருக்கும் மாரனுக்கும் கடும்போர் நிகழ்ந்தது. மாரன் என்பவன் ஒரு மாயாவி. இந்து சமயம் கூறும் மாயை ஒத்தவன். தவசிகளை மயக்குபவன், காமம் , வெகுளி, மயக்கம் முதலியவற்றைச் சுற்றமாகக் கொண்டவன். தவசி புத்தருக்கும் மாரனுக்கும் நிகழ்ந்த போரைப்பற்றிப் பௌத்த நூல்களில் பரக்கக் கூறப்பெற்றுள்ளன. இப்போர் புறப்போர் அன்று. அகப்போர். மனத்தோடு போராடுவது. மனப்போராட்டம். திருவருட்பாவில் வள்ளலார் தத்துவ வெற்றி என்று பாடியுள்ள பாடல்களையெல்லாம் இவ்விடத்தில் நினைவு கூறலாம்.

ஒருநாள் அரச மரத்தடியிலிருந்து எழுந்து சென்று நைரஞ்சரை நதியில் நீராடினார். பின்பு மரத்தின் நிழலில் அமைதியாக அமர்ந்திருந்தார். அந்த நேரத்தில் சுஜாதை கையில் பொற்கிண்ணத்தில் பால் பாயசத்துடன் அங்கே வந்து சேர்ந்தாள். அவள், அருகே இருந்த சேனானி கிராமத்துத் தலைவனின் மகள். அழகும் குணமும் கொண்டவள். தனக்குக் குழந்தை பிறந்தால் அஜபால ஆல மரத்தடியில் உள்ள அதெய்வத்திற்குப் பால் பாயசம் படைப்பதாக வேண்டிக் கொண்டிருந்தாள். அவருக்கு அழகிய ஆண் குழந்தை பிறந்தது. வேண்டுதலை நிறைவேற்றப் பால் பாயசத்துடன் அஜபால ஆலமரத்திற்கு வந்தாள். வந்தவள் மரத்தடியில் புத்தபகவான் அமர்ந்திருப்பதைக் கண்டாள். தெய்வமே மனித உருவில் வந்திருக்கிறது என்று எண்ணினாள். ஒருகையில் குழந்தையை அணைத்தவாறும், மற்றொரு கையில் பாயசக் கிண்ணத்தை ஏந்தியவாறும் வந்த சுஜாதை, குழந்தையைப் புத்தரின் பாதத்தில் கிடத்தினாள். பாயசக் கிண்ணத்தைப் புத்தரின் கரத்தில் அளித்தாள்.

சுஜாதை அளித்த பால் பாயசத்தை புத்தர் அன்போடு ஏற்றுப் பருகி, அவளையும் குழந்தையையும் வாழ்த்தினார். தன்னுடைய எண்பதாண்டு கால நெடிய வாழ்க்கையில் உண்ட உணவுகளில் இரண்டு உணவுகளையே புத்தர் மிகவும் பாராட்டிப் போற்றிக்கூறியுள்ளார். ஒன்று சுஜாதை அளித்த பாற்பாயசம். மற்றொன்று சுந்தன் அளித்த விருந்து. சுஜாதையின் பாற்பாயசம் ததாகதர் ஞானம் பெற உதவிற்று. சுந்தன் அளித்த விருந்து மகாபரி நிர்வாணம் பெற உதவிற்று என்று ததாகதர் கூறியுள்ளார்.

போதி மரத்தின் அடியில் தவமிருந்து ஞானம் பெற்றதால் புத்தருக்குப் போதிமாதவர் என்ற பெயர் உண்டயிற்று. புத்தர் நிறுவிய பௌத்த சங்கத்திற்கும் மகா போதி சங்கம் (மகாபோதி சொசைட்டி, Maha Bodhi Society) என்று பெயருண்டாயிற்று.

போதிமரம் என்பது அரச மரம். அரச மரம் மரங்களுக்கெல்லாம் அரசு (King of Trees) மரவகைகள் அனைத்திற்கும் அரசாகத் திகழ்வதால்தான் அதற்கு அரச மரம் என்றே பெயர் வந்தது.

அரசமரம் ஆண் தன்மை உடையது.

வேப்பமரம் பெண் தன்மை உடையது

ஆலமரம் ஆண்பெண் - இரண்டு தன்மைகளையும் உடையது. மரங்களில் நான் அரச மரமாக இருக்கிறேன் என்று கண்ணபிரான் கீதையிற் கூறியுள்ளார்.

அரச மரத்தினடியில் புத்தர் ஞானம் பெற்றதைப் போன்றே, திருமூலரும் திருவாவடுதுறையில் அரசமரத்தின் கீழே தவமிருந்து ஞானம் பெற்றார். அரச மரத்தைப் போதி என்று திருமூலரும் கூறுகிறார்.

**சேர்ந்திருந்தேன் சிவமங்கைதன் பங்கனைச்**
**சேர்ந்திருந்தேன் சிவன் ஆவடுதண்டுறை**
**சேர்ந்திருந்தேன் சிவபோதியின் நிழலிற்**
**சேர்ந்திருந்தேன் சிவன்நாமங்கள் ஓதியே** - 79

**ஞானத் தலைவிதன் நந்தி நகர்புக்கு**
**ஊனமில் ஒன்பது கோடி யுகந்தனுள்**
**ஞானப் பாலாட்டி நாதனை அர்ச்சித்து**
**நானும் இருந்தேன் நற்போதியின் கீழே** - 82

என்பன திருமூலர் திருமந்திரம். போதிமரத்தைச் சிவபோதி நற்போதி என்று திருமூலர் கூறுகிறார். திருவாவடுதுறைக்கு அரச வனம் என்றும் ஒரு பெயருண்டு. போதம் என்பது ஞானம் அறவு. போதி மரம் அறிவு மரம், ஞானவிருட்சம்.

அரசடியில் சிவபெருமான் எழுந்தருளியுள்ளார். சிவபோதி என்று திருமூலர் கூறுவதைக் காண்க. வேம்பின் கீழ் சக்தி எழுந்தருளி விளங்குவாள். ஆலடியில் சிவபெருமான் திருமால் இருவருமே இருப்பர். ஆலடியில் சிவபெருமான். ஆலிலையில் கண்ணபெருமான்.

புத்தர் ஞானம் பெற இடமாக இருந்த அரசமரம் உலகெங்கும் போற்றப்பெறுகிறது. தொழப்பெறுகிறது. புத்தர் ஞானம் பெற்ற, உருவேலாக்காடு, நைரஞ்சரை ஆறு ஆகிய அதே இடம் தான் இன்றைய புத்தகயை. நைரஞ்சரை ஆறுதான் இன்றைய பங்குனி ஆறு. புத்தகயையும் இந்துக்களின் புனித கயையும் அருகருகே உள்ளன. இரண்டும் சேர்ந்ததுதான். அந்நாளைய மகாகயை. புத்த கயையில் போதி விருட்சம். இந்துக்களின் கயையில் ஆலவிருட்சம் (வடவால் விருட்சம்).

புத்தர் போதிமரத்தின் அடியில் ஞானம் பெற்றநாள் வைகாசிப் பௌர்ணமி. புத்தர் பிறந்த நாளும் வைகாசிப் பௌர்ணமி. பின்னாளில் புத்தர் மகா பரிநிர்வாணம் பெற்றதும் வைகாசிப் பௌர்ணமி. " மதிநாண் முற்றிய

மங்கலத்திருநாள்” என்று வைகாசிப் பௌர்ணமியை மணிமேகலை போற்றிப் புகழ்கிறது.

## <u>தருமச்சக்கரப் பிரவர்த்தனம்</u>

புத்தர் கண்டறிந்து உபதேசித்துப் பரப்பிய தருமத்திற்குப் பௌத்த தருமம் என்று பெயர். புத்தரின் தருமம் பௌத்த தருமம் எனப்பட்டது. புத்தர், அவருடைய தர்மம், அவருடைய சங்கம், (புத்த-தரும-சங்கம்)ஆகிய மூன்றில் புத்தர் முதலிடம் பெறுகிறார். தருமம் இரண்டாவது இடத்தைப் பெறுகிறது. சங்கம் மூன்றாவது இடத்தைப் பெறுகிறது.

புத்தர் ஞானம் பெற்ற இடம் புத்தகயை. முதன் முதலில் தர்மோபதேசத்தைத் தொடங்கிய இடம் சாரநாத். காசிக்கு அருகே உள்ளது. கயையும் புத்தகயையும் அருகருகே உள்ளதைப் போன்றே காசியும் சாரநாத்தும் அருகருகே உள்ளன. கயைக்குச் செல்வோர் அப்படியே புத்தகயைக்குச் சென்று வருவது எளிது. காசிக்குச் செல்வோர் அப்படியே சாரநாத்துக்குச் சென்று வருவது எளிது. இப்படி இரண்டிற்கும் சென்று வருவதே பெரும்பாலும் வழக்கமாக உள்ளது

புத்தர் ஞானம் பெற்ற இடம் புத்தகயை. முதன் முதலில் தர்மோபதேசத்தைத் தொடங்கிய இடம் சாரநாத். காசிக்கு அருகே உள்ளது. கயையும் புத்தகயையும் அருகருகே உள்ளதைப் போன்றே காசியும் சாரநாத்தும் அருகருகே உள்ளன. கயைக்கு செல்வோர் அப்படியே புத்தகயைக்குச் சென்று வருவது எளிது. காசிக்குச் செல்வோர் அப்படியே சாரநாத்துக்குச் சென்று வருவது எளிது. இப்படி இரண்டிற்கும் சென்று வருவதே பெரும்பாலும் வழக்கமாக உள்ளது.

புத்த கயையில் ஞானம் பெற்ற பகவான் புத்தர் காசிக்குச் சென்றார். அங்கிருந்த பழைய நண்பர்களைக் கண்டு உரையாடினார். காசியிலிருந்து சாரநாத்திற்குச் சென்றார். சாரநாத் என்பது சாரநாதம். பத்ரீநாதம் கேதாரநாதம் என்பவை பத்ரிநாத், கேதார்நாத் என வழங்கப்பெறுவதைப் போன்று, சாரநாதம் சாரநாத் என்று வழங்கப்பெறுகிறது. சாரநாத்திற்கு மான் வனம் (மான்காடு) என்றும் ஒரு பெயருண்டு.

பகவான் புத்தர் தாம் கண்டறிந்த உண்மைகளை - ஞானத்தை - முதன் முதலில் உபதேசிக்கத் தொடங்கிய நிகழ்ச்சியைப் பௌத்த உலகில் “தரும சக்கரப் பிரவர்த்தனம்“ எனக் கூறுவர். தமிழில் “அற ஆழி உருட்டுதல்“ என்பர். தர்மப் பிரச்சாரத்தின் தொடக்கம் தரும சக்கரப் பிரவர்த்தனம் என்ற ஒரு அருமையான பெயரைப் பெற்றது.

## <u>பௌத்த தருமம்</u>

பௌத்த தருமம் நான்கு வாய்மைகளையும் அட்டாங்க மார்க்கத்தையும் கூறுகிறது.

நான்கு வாய்மைகளாவன:

1. துக்கம்

2. துக்க காரணம் (துக்கோற்பத்தி)

3. துக்க நிவாரணம்

4. துக்க நிவாரணமார்க்கம்

உலக வாழ்வே துக்கமயமானது என்பது முதலாவது உண்மை. பிறப்பு, பிணி மூப்பு, சாக்காடு ஆகிய அனைத்தும் துன்பமயமே.

**பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்**
**பிறவார் உறுவது பெரும் பேரின்பம்**
**பற்றின் வருவது முன்னது, பின்னது**
**அற்றோர் உறுவது.**

என்பது மணிமேகலை ( 2 - ஆம் காதை 64-7).

**துன்பம் தோற்றம் பற்றே காரணம்**
**இன்பம் வீடே பற்றிலி காரணம்**
**ஒன்றிய உரையே வாய்மைநான்காவது.**

என்னும் மணிமேகலை நான்கு வாய்மைகலையும் குறிப்பிடுகிறது(30-ஆம் காதை 186-8).

துக்கம் இன்ன தென்பதனை அறிந்து, துக்கம் உண்டாவதற்கான காரணங்களை அறிது, துக்கத்தை நீக்கவேண்டும் என்பதை அறிந்து, துக்கத்தை நீக்குவதற்கான வழிகளையும் அறிந்து ஒழுகுதலே மேற்கூறிய நான்கு வாய்மைகளாகும்.

பௌத்த சமய தத்துவத்தில் பன்னிரண்டு நிதானங்கள் கூறப்பெறுகின்றன. (நிதானம் = காரணம்) பன்னிரண்டு நிதானங்களையும் தமிழில் பன்னிரு சார்பு என்பர். பௌத்த தத்துவ நூல்கள் பாலிமொழியில் உள்ளன. தமிழில் உள்ள மிகச் சில பௌத்த நுல்களில் மிகச் சிறந்தது மணிமேகலை ஒன்றுதான். மணிமேகலையின் கடைசிப் பகுதி 30-ஆவது காதை, பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை, முழுவதும் பௌத்த தத்துவங்களைத் தொகுத்துக் கூறுவதாகவே அமைந்துள்ளது.

பன்னிரண்டு சார்புகளின் பெயர்களைப் பின்வருமாறு மணிமேகலை கூறுகிறது.

**“பேதைமை, செய்கை, உணர்வே, அருவுரு**
**வாயில் ஊறே நுகர்வே வேட்கை**

**பற்றே பவமே தோற்றம் வினைப்பயன்**
**இற்றனெ வகுத்த இயல்(பு) ஈராறும்**
**பிறந்தோர் அறியில் பெரும்பேறு அறிகுவர்**
**அறியார் ஆயின் ஆழ்நரகு அறிகுவர்”**

என்பது மணிமேகலை (24-ஆம் காதை 105-110; 30-ஆம் காதை 45-50)

பன்னிரண்டு சார்புகள்:

1. பேதைமை
2. செய்கை
3. உணர்வு
4. அருவுரு
5. வாயில்
6. ஊறு
7. நுகர்வு
8. வேட்கை
9. பற்று
10. பவம்
11. தோற்றம்
12. வினைப்பயன்

## 1.பேதைமை

**பேதைமை என்பது யாது என வினவின்**
**ஓதிய இவற்றை உணராது மயங்கி**
**இயற்பாடு பொருளால் கண்டது மறந்து**
**முயற்கோ(டு)உண்(டு) எனக் கேட்டது தெளிதல்**

(30;51-54)

பேதைமை என்பது அறியாமை. பௌத்த நூல்களை தாமே ஓதி உணராமல், தக்காரிடம் பாடம்கேட்டு, உபதேசம் கேட்டு உணராமல், மயங்கி, அனுபவத்தாலும் அறியாமல், யாரோ முயலுக்குக் கொம்பு உண்டு என்று சொன்னல் அதைப் போன்றவற்றை ஆராயமல் ஏற்றுக்கொள்ளுவது பேதைமை என்கிறார் மணிமேகலை ஆசிரியர் சாத்தனார்.

## 2. செய்கை

தீவினை நல்வினை என்று செய்கை இரு வகைப்படும்

**தீவினை என்பது யாதென வினவின்**
**ஆய்தொடி நல்லாய் ஆங்கது கேளாய்**
**கொலையே களவே காமத்தீ விழை**
**உலையா உடம்பில் தோன்று வழுன்றும்**
**பொய்யோ குறளை கடுஞ்சொற் பயனில்**
**சொல் எனச் சொல்லில் தோன்று நான்கும்**
**வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சி என்(று)**

உள்ளந்தன்னின் உருப்பனமூன்றும் எனப்
பத்துவகையால் பயந்தெரிபுலவர்
இத்திறம் படரார் படர் குவராயின்
விலங்கும் பேயும் நரகரும் ஆகிக்
கலங்கிய உள்ளக் கவலையில் தோன்றுவர்.

- 30:" 64-75

உடம்பினால் உண்டாகும் தீவினை மூன்று

1. கொலை, 2. களவு, 3. காமம்

சொல்லால் உண்டாகும் தீவினை நான்கு

1. பொய், 2. புறம்பேசல் ( கோள் சொல்லல்),
2. இன்னாச் சொல் (கடுஞ்சொல்)கூறல் 4. பயனில் சொல் கூறல்.

மனத்தால் உள்ளத்தால் உண்டாகும் தீவினைகள் மூன்று

3. உணர்வு

உணர்வெனப் படுவது உறங்குவோர்
புரிவின்றாகிப் புலன் கொளாததுவே - 30 :84-85

4. அருவுரு

அருவுரு என்பது அவ்வுணர்வு சார்ந்த
உயிரும் உடம்பும் ஆகும் என்ப - 30:84-85

5. வாயில்

வாயில் ஆறும் ஆயும் காலை
உள்ளம் உறுவிக்க உறும் இடனாகும். - 30:86-87

பொறிவாயில் ஐந்து என்பத் இதுதான். மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐபொறியுடன் மனமும் சேர்ந்து வாயில்கள் ஆறு. உலகத்தை அனுபவிக்க இவ்வாறுமே வாயில்களாக உள்ளன. வெளிவிடயங்கள் இவ்வாயில்களின் வழியே புகுகின்றன.

6. ஊறு

ஊறுஎன உரைப்பது உள்ளமும் வாயிலும்
வேறு புலன்களை மேவுதல் என்ப -30;88-89

7. நுகர்ச்சி

**நுகர்வே உணர்வு புலன்களை நுகர்தல்** -30:90

8. வேட்கை

**வேட்கை விரும்பி நுகர்ச்சி ஆராமை** -30:91

9. பற்று

**பற்றெனப் படுவது பசைஇய அறிவே** - 30:92

10. பவம்

**பவம் எனப்படுவது கரும ஈட்டம்**
**தருமுறை இதுவெனத் தாம் தாம் சார்தல்** - 30:93-94

11. தோற்றம் - பிறப்பு

**பிறப்பெனப் படுவ(து) அக்கருமப் பெற்றியின்**
**உறப்புணர் உள்ளம் சார்பொரு கதிகளில்**
**காரண காரிய உருக்களில் தோன்றல்** -30 : 95 -97

இருவினைக்கு ஈடாக, காரிய காரண அடிப்படையில் அறுவகைப் பிறப்பில் ஏதாவது ஒன்றிற் பிறத்தல். அறுவகைப் பிறப்பாவது. மக்கள்,தேவர், பிரமர்- நல்வினை யாலாகும் பிறப்பு. நரகர், விலங்கு,. பேய் - தீவினையால் ஆகும் பிறப்பு.

**உலகம் மூன்றினுள் உயிராம் உலகம்**
**அலகில் பல்லுயிர் அறுவகைத்தாகும்**
**மக்களும் தேவரும் பிரமரும் நரகரும்**
**தொக்கவிலங்கும் பேயும் என்றே**
**நல்வினை தீவினை என்(று) இருவகையால்**
**சொல்லப்பட்ட கருவில் சார்தலும்** - 30 : 55-60

12.வினைப்பயன்

மூப்பு, பிணி, சாக்காடு, அவலம், அரற்று, கவலை, கையாறு என ஏழுகூறாக வினைப்பயன் பௌத்த நூல்களில் கூறப்பெறுகிறது.

**பிணி எனப்படுவது சார்பில் பிரிதாய்**
**இயற்கையில் திரிந்து உடம்பு இடும்பை புரிதல்**
- 30:98-99

**மூப்பு எனமொழிவது அந்தத் தளவும்**
**தாக்கு நிலையாமையில் தாம் தளர்ந்திடுதல்**
- 30:100-101

**சாக்கா(டு) என்பது அருவுருத் தன்மை**
**யாக்கை வீழ்கதிர் என மறைந்திடுதல்** - 30:102-103

ஏனையவற்றை வரும் வழிக் கண்டு கொள்க. பொது நூலாகிய இந்நூற்குத் தத்துவ விரிவு மிகுதியும் வேண்டா என விடுத்றேதாம்.

மேற்கூறிய பன்னிரு சார்புகளின் ஆக்கத்தையும் மீட்சியையும் மணிமேகலை ஆசிரியர் சாத்தனார் அழகாகக் கூறுகிறார்.

**"பேதைமை சார்வாச் செய்கையாகும்**
**செய்கை சார்வா உணர்ச்சியாகும்**
**உணர்ச்சி சார்வா அருவுருவாகும்**
**அருவுருச் சார்வா வாயில் ஆகும்**
**வாயில் சார்வா ஊறா கும்மே**
**ஊறுசார்ந்து நுகர்ச்சியாகும்**
**நுகர்ச்சிசார்ந்து வேட்கையாகும்**
**வேட்கை சார்ந்து பற்றாகும்மே**
**பற்றின் தோன்றும் கருமத் தொகுதி**
**கருமத் தொகுதி காரணமாக**
**வருமே ஏனை வழிமுறைத் தோற்றம்**
**தோற்றம் சார்பின் மூப்புப் பிணி சாக்கா(டு)**
**அவலம் அரற்றுக் கவலை கையாறு எனத்**
**தவலில் துன்பம் தலைவரும் என்ப**
**ஊழின் மண்டலமாச் சூழும் இந்நுகர்ச்சி "**

**மணிமேகலை 30:ஆம் காதை 104-118**

**பேதைமை மீளச் செய்கை மீளும்**
**செய்கை மீள உணர்ச்சிமீளும்**
**உணர்ச்சி மீள அருவுருமீளும்**
**வாயில்மீள ஊறு மீளும்**
**ஊறுமீள நுகர்ச்சி மீளும்**
**நுகர்ச்சி மீள வேட்கை மீளும்**
**வேட்கை மீளப் பற்று மீளும்**
**பற்று மீளக் கருமத் தொகுதி**
**மீளும் கருமத் தொகுதி மீளத்**
**தோற்றம் மீளும் தோற்றம் மீளத்**
**பிறப்பு மீளும் பிறப்புப் பிணிமூப்புச்**
**சாக்காடு அவலம் அரற்றுக் கவலை**
**கையாறு என்றிக் கடையில் துன்பம்**
**எல்லாம் மீளும் இவ்வகையான் மீட்சி**

**மணிமேகலை 30-ஆம் காதை 119-33**

மேற்காட்டிய இருதொடர்களும் பன்னிருசார்புகளின் ஆக்கத்தையும் மீட்சியையும் முறையே கூறுகின்றன. இவை துக்க காரணமும் துக்க நிவாரண மார்க்கமுமாகும்.

## அஷ்டாங்க மார்க்கம்

மெய்ஞ்ஞானம் பெறுவதற்கு புத்தர் பெருமான் கூறியுள்ள நியமங்கள் முப்பத்தேழு. அவை ஏழு பிரிவுகளில் அடங்கும்.

| | |
|---|---|
| 1. நான்கு ஸதிப் பிரஸ்தானங்கள் | 1 முதல் 4 |
| 2. நான்கு ஸம்யக் பிரதானங்கள் | 5 முதல் 8 |
| 3.ஐந்து இருத்தி பாதங்கள் | 9 முதல் 13 |
| 4. ஐந்து இந்திரியங்கள் | 14முதல் 18 |
| 5. ஐந்து பலங்கள் | 19முதல் 23 |
| 6. ஏழுபோத்தியாயங்கள் | 24முதல் 29 |
| 7. அஷ்டாங்க மார்க்கம் | 30 முதல் 37 |

மேற்கண்ட ஏழு பிரிவுகளில் ஏழாவது பிரிவான அட்டாங்க மார்க்கமே துக்க நிவாரண மார்க்கத்தில் முதன்மையாகக் கூறப்பெறுகிறது. எட்டு அங்கங்களை உடைமையால் அட்டாங்க மார்க்கம் என்று பெயர் பெற்றது. அங்கங்கள்-படிகள்-அட்டாங்க மார்க்கம் வருமாறு.

| படிகள் | பாலி | ஆங்கிலம் |
|---|---|---|
| 1. நற்காட்சி | ஸம்மாதிட்டி | Right View |
| 2. நல்லூற்றம் | ஸம்மாஸங்கள்ப | Right Aspiration |
| 3. நல்வாய்மை | ஸம்மாவாசர | Right Speech |
| 4. நற்செய்கை | ஸம்மாகம்மந்த | Right Activity |
| 5. நல்வாழ்க்கை | ஸம்மாஜீவ | Right Living |
| 6. நல்லூக்கம் | ஸம்மாவாய | Right Effort |
| 7. நற்கடைப்பிடி | ஸம்மாஸதி | Right Mindfulness |
| 8. நல்லமைதி | ஸம்மாஸம்மதி | Right Contemplation |

இவற்றை ஒவ்வொரு படியாகத் தாண்டிச் செல்ல வேண்டும் என்பதில்லை. வாழ்க்கையில் இவை அனைத்தையும் எப்பொழுதுமே கடைப்பிடித்து வரவேண்டும்.

<u>நற்காட்சி</u>

மக்கட்பிறப்பின் தனிச்சிறப்பு பகுத்தறிவு. பகுத்தறிவைப் பயன்படுத்தி நல்லவற்றை அறிவதே நற்காட்சி.

**எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு.**

**இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி**
**மாசறு காட்சி யவர்க்கு**

என்று திருக்குறட்பாக்கள் நற்காட்சிக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாம். சமயவாழ்வின் முதற்படியாக நற்காட்சியை அமைத்திருக்கும் காரணம் நற்காட்சியைக் கொண்டுதான். துக்கம், துக்க காரணம், துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் ஆகிய நான்கு வாய்மைகளையும் அறிந்துகொள்ள முடியும் என்பதே.

**<u>நல்லூற்றம்</u>**

நற்காட்சியோடு இணைப்புள்ளது. நல்விருப்பம், நல் ஆர்வம், நற்சிந்தனை என்றெல்லாம் கூறப்பெறும்.

**<u>நல்வாய்மை</u>**

சத்தியமானவற்றைப் பேசுவதே நல்வாய்மை. பொய்யுரை, புறங்கூறுதல், நிந்தைப்பேச்சு, பயனற்ற பேச்சு முதலியவற்றைத் தவிர்த்தல்.

**நற்செய்கை**

உயிர்க்கொலை, களவு, முறை தவறிய சிற்றின்ப அனுபவம் ஆகியவற்றை தவிர்த்தல். உயிர்க் கொலையும் புலால் உண்பதும் அறவே தவிர்த்தல். இவை சம்பந்தமான எல்லாவற்றையும் தவிர்த்தல். தவறான முறையில் பெறும் பொருள்களும் களவால் வந்ததாகவே கருதப் பெறும். பிறர் பொருளை உள்ளத்தால் நினைத்தாலும் தீது.

**<u>நல்வாழ்வு</u>**

நல்தொழில்களைச் செய்து வாழ்தல், புலால் விற்றல், மீன் விற்றல், மது விற்றல் முதலிய தொழில்களைச் செய்து வாழாமை.

**<u>நல்லூக்கம்</u>**

செம்பு பித்தளைகளில் களிம்பு பற்றாமல் அவ்வப்போது அவற்றைக் கவனமாக விளக்கிச் சுத்தம் செய்வது போல, தீய எண்ணங்கள் முளைத்து வளராமல் உள்ளத்தைக் காத்து வருதல், தீய எண்ணங்களுக்குப் பதிலாக நல்ல எண்ணங்களை வளர்த்தல்.

**<u>நற்கடைப்பிடி</u>**

கடைப்பிடி என்பது உறுதி. நற்கடைப்பிடியை நல்ல உறுதி என்று கொள்ளலாம். பாலிமொழியில் “ஸம்மாஸமாதி” என்பர். ஒவ்வொரு செயலையும் கருத்தோடு, மன உறுதியோடு, ஊக்கத்தோடு செய்தல் ஸதி ஆகும். சரியான சமயத்தில் சரியான வேலையைச் செய்தல்.

**நல்லமைதி**

மேற்கூறிய ஏழுபடிகளுக்கும் இதுவே சிகரம், மனத்தை வெளியே ஓடித்திரிய விடாமல், ஒருநிலைப் படுத்தித் தியானத்தில் செலுத்துதல்.

பௌத்த சமய தத்துவ நூல்களில் பௌத்த தத்துவங்கள் விரிவாகக் கூறப்பெற்றுள்ளன. மேலே மிகச் சுருக்கமாக இரண்டொருவரிகளில் நாம்

எடுத்துக்காட்டியுள்ளோம். சதிப்பிரஸ்தானங்கள், ஸம்யக் பிரதானங்கள் முதலியவற்றின் விளக்கங்களை விரிந்த நூல்களிற் காண்க.

**<u>பஞ்சசீலம்</u>**

பௌத்தத்தில் மிகச் சிறப்பாகக் கூறப்பெறுவது பஞ்சசீலக் கொள்கையே. பஞ்சசீலம் என்பது ஐந்து ஒழுக்கங்கள்.

1. **கொல்லாமை**
2. **பொய்யாமை**
3. **கள்ளாமை**
4. **காமமின்மை**
5. **கள்ளுண்ணாமை**

இவ்வைந்து சீலங்களும் இல்லறத்தார்க்குச் சிறப்பாக உரியன. இல்லறத்தர் "சாவகர் " என்று பிடக நூற்களிற் கூறப்பெறுவர். இந்த ஐந்து சீலங்களுடன்

6. உயர்ந்த பீடங்களில் அமராமை, கிடவாமை

7. மணப் பொருள்களை நுகராமை
8. பொன், வெள்ளி முதலியவற்றை நாடாமை

9. பாடல் ஆடல் முதலியன விழையாமை

10. பொழுது புலர்வதன் முன் உண்ணாமை ஆகிய ஐந்தும் சேர்ந்து பத்துச் சீலங்களும் புத்த பிட்சுக்களுக்குரியவை.

தசசீலங்களைப் போலவே பத்துப் பாரமிதைகள் கூறப்படும். பத்துப் பாரமிதைகளாவன:

1. தானம் 2. சீலம் 3. சாந்தி 4. வீரியம் 5. தியானம்
6.பிரஞ்ஞை 7.உபாயம் 8.பிரணிதாளம் 9.பலம் 10.ஞானம்

## பௌத்த சங்கம்

உலகிலேயே ஆன்மிகத்திற்கென முதன்முதலில் சங்கங்கண்டவர் பகவான் புத்தரே.

மான்சோலையிலே இருந்துகொண்டு அங்கு வந்தவர்கள் அனைவருக்கும் புத்தர் தமது தருமத்தை உபதேசம் செய்துகொண்டிருந்தார். நாள்தோறும் ஆண்களும் பெண்களும் பலர் வந்து உபதேசம் கேட்டுச் சென்றனர்.

தமது தருமம் நிலைத்து நிற்பதற்கும், எங்கும் பரவுவதற்கும் தம் சீடர்கள் தனித்தனியே இருப்பதைவிட ஒன்று சேர்ந்து சங்கமாக ஐக்கியப்படவேண்டும்.

என்று கருதினார். முதலில் தன்னிடம் சேர்ந்த ஐந்து சீடர்களையும் சங்கமாகக் கூடச் செய்தார்.

சாரீரபுத்திரர், மௌத்தகல்யாயனர் என்ற மொக்கலன்னா, காசியவர் அக்கினிதத்தர் என்பவர் முக்கியமான முவர். இம்மூவர் உள்ளிட்ட ஐந்து பிக்குகள் முதன் முதலில் திரிசரணத்தை ஓதி சங்கத்தில் சேர்ந்தனர். இவ்வாறு பௌத்த சங்கம் உருவாயிற்று.

**புத்தம் சரணம் கச்சாமி**
**தம்மம் சரணம் கச்சாமி**
**சங்கம் சரணம் கச்சாமி**
**துதியம்பி புத்தம் சரணம் கச்சாமி**
**துதியம்பி தம்மம் சரணம் கச்சாமி**
**துதியம்பி சங்கம் சரணம் கச்சாமி**

**ததியம்பி புத்தம் சரணம் கச்சாமி**
**ததியம்பி தம்மம் சரணம் கச்சாமி**
**ததியம்பி சங்கம் சரணம் கச்சாமி**

என்று திரிசரணத்தை மும்முறை ஓதிச் சங்கத்தில் சேர்வது வழக்கமாயிற்று.

**“புத்த தன்ம சங்க மென்றும்**
**முத்திற மணியை மும்மையின் வணங்கிச்**
**சரணாகதியாய்ச் சரண் சென்றடைந்தபின் “**

என்று மணிமேகலை கூறுகிறது. (30ஆம் காதை 4-5)

புத்தரையும் அவருடைய தன்மத்தையும், அவருடைய சங்கத்தையும் மும்மணிகள் எனப் பௌத்தர்கள் வழங்குவர். பௌத்தர்கள் இம்மும்மணிகளையும் சரணடைய வேண்டும். அது திரிசரணம் எனப்படும்.

புத்தம் சரணம் கச்சாமி என்பதற்குப் புத்தரைச் சரணமடைகிறேன் என்று பொருள். தம்மம் சரணம் கச்சாமி என்பதற்கு அவருடைய தருமத்தைச் சரணமடைகிறேன் என்று பொருள். சங்கம் சரணம் கச்சாமி என்பதற்கு அவருடைய சங்கத்தைச் சரணமடைகிறேன் என்று பொருள். துத்யம்பி என்பது இரண்டாம் முறையும் சரணமடைதல். தித்யம்பி என்பது மூன்றாம் முறையும் சரணமடைதல். புத்தம், புத்த தர்மம், புத்த சங்கம், ஆகிய மூன்றைச் சரணமடைவதால் திரசரணம்.

பௌத்தர்களின் திரிசரணம் எவ்வளவு அழகாக, பொருள் பொதிந்ததாக, சில சொற்களில் அமைந்து, பயின்ற சொற்களோ திரும்பத் திரும்பப்பயின்று, இன்னோசையுடன் சூத்திரம் போன்று அருமையாக அமைந்துள்ளது என்பதைக் காணும்போது மனம் இறும்பூ தெய்துகிறது. திரிசரணத்தின் சொல்லமைப்பும் ஒலியமைப்பும் சொல்லச் சொல்ல நாவெல்லாம் இனிப்பதால், கேட்கச் கேட்கச்

செவியெல்லாம் இனிப்பதாய் அமைந்துள்ளது. பொருளமைப்போ மனமெல்லாம் தித்திப்பதாய் அமைந்துள்ளது.

சரணமடைவதற்கு புத்த, தர்ம, சங்கம் ஆகிய மூன்றும் உள்ளதைப்போலவே, சன்மார்க்க அன்பர்கள் சரணமடைவதற்கும் மூன்று உள்ளது. வள்ளலார், அவர் கண்ட மார்க்கம் அவர் நிறுவிய சங்கம். சன்மார்க்க அன்பர்கள் வள்ளலாரைச் சரணடைய வேண்டும். அவருடைய சன்மார்க்கத்தைச் சரணடைய வேண்டும். அவருடைய சன்மார்க்க சங்கத்தைச் சரணடைய வேண்டும்.

புத்த பிட்சுகள் ஒழுக்கம் நிரம்பப் பெற்றவர்களாக இருக்கவேண்டும். பிச்சை ஏற்றே உண்ண வேண்டும். அரசு குமாரராகப் பிறந்த புத்தர் சொந்தத் தலைநகரில் அரண்மனைக்குப் பிச்சைக்கு வந்தார். யசோதையும் இராகுலனும் புத்தருக்குப் பிச்சையிட வேண்டியாதாயிற்று. மன்னர் சுத்தோதனர், அரசகுமாரராகப் பிறந்தவருக்கு இது தகுதியா என்று வினவினார். இது நமது பரம்பரை வழக்கம் என்று புத்தர் மறு மொழி கூறினார். அரச பரம்பரைக்குப் பிச்சை யேற்பதா வழக்கம் என்று சுத்தோதன மன்னர் மீண்டும் கேட்டார். நான் அரச பரம்பரையைச் சொல்லவில்லை. புத்த பரம்பரையைச் சொல்லுகிறேன் என்று புத்தர் சொன்னார்.

பிச்சைப்பாத்திரம், மூன்று ஆடைகள், இடையிற் கட்டும் கச்சை, கந்தைகளைத் தைப்பதற்கு வேண்டிய ஊசிநூல், சவரக்கத்தி, நீர்வடிகட்டும் துணி ஆகிய எட்டுமே பிட்சுக்கள் வைத்துக்கொள்ளக்கூடியவை. இவற்றுக்குமேல் மிகையாக எதையும் வைத்துக் கொள்ளலாகாது என்பது விதி.

முதலில் பிட்சு சங்கமே ஏற்பட்டது. ஆடவர் மட்டுமே துறவிகளாக, பிட்சுகளாக, சங்கத்தில் சேர்த்துக்கொள்ளப் பெற்றனர். பெண்கள் சேர்த்துக்கொள்ளப்பெறவில்லை. புத்தரின் சிற்றன்னை கௌதமி சங்கத்தில் சேர்ந்து பிக்குணியாக விரும்பினார். முதலில் புத்தர் இடங்கொடுக்கவில்லை. நீண்ட நாள் வேண்டுகோளுக்கும் அணுக்கத் தொண்டர் ஆனந்தரின் பரிந்துரைக்கும் பின்னர் பகவான் மனமிரங்கி பிக்குணிகளுக்கு எட்டு முக்கிய ஒழுக்க விதிகளை விதித்துச் சேர்த்துக் கொண்டார். முதன் முதலில் சங்கத்தில் சேர்ந்த பிக்குணி சிற்றன்னை கௌதமியே. பிக்குகளுக்குத் தனி சங்கமும் பிக்குணிகளுக்குத் தனிசங்கமும் ஏற்படுத்தப்பெற்றன.

பெண்களைச் சேர்க்காமல் இருந்தால், தருமமும் சங்கமும் ஆயிரம் ஆண்டுகாலம் நிலைத்திருக்கும். சேர்த்துக் கொண்டுவிட்டதால் ஐந்நூறு ஆண்டுகளே நிலைத்திருக்கலாம் என்று புத்தபகவான் கூறினார்.

பகவான் புத்தர் பௌத்த சங்கத்தை ஏற்படுத்தியது போன்றே வள்ளற்பெருமானும் தமது மார்க்கத்தைப் பரப்பவும் வளர்க்கவும் சன்மார்க்க சங்கத்தை ஏற்படுத்தி அருளினார். தமிழ்நாட்டில் ஆன்மீகத்திற்கென முதன் முதலில் சங்கம் கண்டவர் வள்ளலாரே. சங்கம் தமிழகத்திற்குப் புதியதன்று. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தவர்கள் நம்முன்னோர். அக்காலத்தைச் சங்ககாலம் என்றே வழங்குகிறோம். தமிழையும் சங்கத் தமிழ் என்கிறோம். மொழிச் சங்கம் நமக்குப் பழமையானது. ஆன்மீக சங்கமோ நமக்கு முற்றிலும் புதுமையானது. தமிழ்நாட்டில் ஆன்மீகத்திற்கென முதன் முதலிற் சங்கம் கண்டவர் வள்ளலாரே. இந்தியாவில் சங்கம் கண்டஞானிகள் இருவர். ஒருவர் புத்தர். மற்றொருவர் நம்

வள்ளலார். இந்தியாவில் முதன் முதலாகச் சமயத்திற்கெனச் சங்கம் கண்டபெருமை பகவான் புத்தரையே சாரும். பௌத்த சமயம் இன்று உலக சமயமாகத் திகழ்வதற்குக் காரணம் சங்கமே. வள்ளலாரின் சன்மார்க்க சங்கமும் இன்று உலகெங்கும் பரவிவருகிறது.

## பௌத்த மாநாடுகள்

புத்தர் பரிநிர்வாணமடைந்த பின்னர் புத்த பிக்குகளிடையே ஒழுங்கும் கட்டுப்பாடும் குலையலாயிற்று. புத்தரின் போதனைகள் அனைத்தும் வாய்மொழி உபதேசங்களாகவே இருந்தன. எழுதி வைக்கப் பெறவில்லை. புத்தரின் போதனைகளுக்கு அவரவர் மனம் போனபடி புத்த பிக்குகள்பொருள்கூறி வரத்தொடங்கினர். போதனைகளின் தூய்மையைப் பாதுகாக்கவும், இடைச் செருகல், திரிபு முதலியவற்றைத் தவிர்க்கவும் வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலையில் மகாகசியபர் சுபுத்தர் ஆகிய மூத்த பிக்குகள் கூடி ஆலோசித்து, பிக்குகள் அனைவரையும் கூட்டி மாநாடு நடத்தி எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்த வேண்டும் என்று முடிவுசெய்தனர்.

## முதல்மாநாடு

முதல் மாநாடு இராஜகிருகத்தில் கூடிற்று. இராஜகிருகத்தில் ஸத்த பனிமலைக் குகையில் கூடியதாக ஒரு குறிப்பு உள்ளது. ஐந்நூறு அர்ஹத்துகள் கலந்து கொண்டனர். பிக்குகளில் தகுதி மிகுந்த மூத்தவர்கள் அர்ஹத் எனப்பெறுவர். மகாகாசியபர், சுபுத்தர், உபாலி, ஆனந்தர் ஆகிய நால்வரும் முக்கிய பங்குவகித்தனர். புத்தரின் போதனைகள் வாய்மொழியாக இம்மாநாட்டில் ஒப்புவிக்க பெற்றுத் திரிபிடகங்களாக வகுக்கப்பெற்றன. மகதமன்னர் அஜாத சத்துரு இம்மாநாட்டிற்குப் புரவலராக இருந்துதவினார்.

## இரண்டாவது மாநாடு

இரண்டாவது மாநாடு புத்தரின் பரிநிர்வாணத்திற்கு ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர் வைசாலி நகரில் கூடிற்று. எழுநூறு பிக்குகள் கூடினர். பௌத்த சங்கத்தில் புதிதாகத் தோன்றிய சில பழக்கங்களை நீக்க வேண்டும் என்ற முயற்சி மேற்கொள்ளப்பெற்றது. எட்டு மாதங்கள் ஆராய்ச்சிகளும் விவாதங்களும் நடந்தன. காலசோக மன்னர் இம்மாநாட்டை நடத்திக்கொடுத்தார். பெருமானது உபதேச மூலங்களை அப்படியே காப்பாற்ற வேண்டும். இடைச் செருகல்களை, புதிய புகுதலைத் தவிர்க்க வேண்டும் என்று முடிவு செய்யப்பெற்றது. இந்த முடிவை ஏற்காத பதினாயிரம் பிக்குகள் பழைய சங்கத்திலிருந்து பிரிந்தனர்.

## மூன்றாவது மாநாடு

இதற்கு நூற்றிருபத்தைந்து ஆண்டுகளுக்குப்பின் அசோக சக்கரவர்த்தி காலத்தில் பாடலிபுத்திரத்தில் மூன்றாவது மாநாடு நடந்தது. பௌத்த சமய நடைமுறைகளில் இருந்த குறைபாடுகளும் கலப்புகளும் நீக்கப்பெற்றுத்

திரிபிடகங்கள் பரிசுத்த நிலையில் வைக்கப் பெற்றன. அசோக சக்கரவர்த்தியே உடனிருந்து இம்மாநாட்டைச் சிறப்புற நடத்தி வைத்தார்.

## நான்காம் மாநாடு

இதற்கு இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின்பு கனிஷ்க சக்கரவர்த்தி காலத்தில் குண்டலபுர ஆசிரமத்தில் நான்காவதாக ஒரு மாநாடு நிகழ்ந்தது.

## மணிமேகலையில் புத்தர் புகழ்

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை புத்தபெருமான் புகழைப் பரக்கப்பேசுகிறது. பல இடங்களில் போற்றிப் புகழ்ந்து கூறுகிறது. சில இடங்களைக் காண்போம்.

### அருள்-அன்பு-ஆருயிர் ஓம்பும் பகவன்

**அருளு மன்பு மாருயி ரோம்பும்**
**ஒருபெரும் பூட்கைய மொழியா நோன்பிற்**
**பகவன் - 3, மலர்வனம் புக்க காதை, 59-61**

அருளும் அன்பும் ஆருயிர் ஓம்பும் ஒரு பெரும் பூட்கையும் ஒழியா நோன்பிற் பகவன் - அருள் அன்பு ஆருயிர் ஓம்பும் ஒருபெரும் மேற்கோள் ஆகியவற்றை ஒழியா நோன்பாகக் கொண்ட பகவன்.

அருள் - அன்பு காரணத்தால் தோன்றும் அளி.
அன்பு - அருட்கு முதலாகி மனத்தின் கண் நிகழும் நேயம்

### தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்

**தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்** என்று பகவான் புத்தரை மணிமேகலை புகழ்கிறது. “ **தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் பண்ணன்”** என்று பசிப்பிணி மருத்துவன் பண்ணனை அகநானூறு புகழ்கிறது (54).

**தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்** என்ற அருந்தொடர் அகநானூறு, மணிமேகலை ஆகிய இரண்டிலும் வருகிறது. அகநானூற்றில் பசிப்பிணி மருத்துவன் புகழாக வருகிறது. மணிமேகலையில் புத்த பெருமான் புகழாக வருகிறது.

**எங்கோன் இயல்குணன் ஏதமில் குணப்பொருள்**
**உலக நோன்பில் பலகதி உணர்ந்து**
**தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்**
**இன்பச் செல்வி மன்பதை எய்த**
**அருளறம் பூண்ட ஒருபெரும் பூட்கையின்**
**அறக்கதி ராழி திறம்பட உருட்டிக்**
**காமற் கடந்த வாமன்.**

**- 5 மணிமேகலா தெய்வம் வந்துதோன்றிய காதை 71-7**

என்பது மணிமேகலை. புத்த பெருமானைத் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் என்று போற்றிப் புகழ்வது.

**விருந்தின் மன்னர் அருங்கலம் தெறுப்ப,**
**வேந்தனும் வெம்பகை தணிந்தனன், தீம் பெயற்**
**காரும் ஆர்கலி தலையின்று. தேரும்**
**ஓவத்தன்ன கோவச் செந் நிலம்.**

**வள் வாய் ஆழி உள் உறுபு உருள,**
**கடவுக, காண்குவம்-பக! மதவு நடைத்**
**தாம்பு அசை குழவி வீங்குசுரை மடிய,**
**கனைஅலம் குரலகாற் பரி பயிற்றி,**
**படு மணி மிடற்ற பய நிரை ஆயம்**
**கொடு மடி உடையர் கோற் கைக் கோவலர்**
**கொன்றை அம் குழலர் பின்றைத் தூங்க**
**மனைமனைப் படரும் நனை நகு மாலை,**

**தனக்கென வாழாப் பிறர்க்கு உரியாளன்**
**பண்ணன் சிறுகுடிப் படப்பை நுண் இலைப்**
**புன் காழ் நெல்லிப் பைங் காய் தின்றவர்**
**நீர்குடி சுவையின் தீவிய மிழற்றி,**
**‘ முகிழ் நிலாத் திகழ்தரும் மூவாத் திங்கள்!**
**பொன்னுடைத் தாலி என் மகன் ஒற்றி,**
**வருகுவைஆயின், தருகுவென் பால் என,**
**விலங்கு அமர்க் கண்ணள் விரல் விளி பயிற்றி,**
**திதலை அல்குல் எம் காதலி**
**புதல்வற் பொய்க்கும் பூங்கொடி நிலையே.**

**-அகநானூறு 54**

என்பது அகநானூறு(54) தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் பண்ணன் என்று பசிப்பிணி மருத்துவன் பண்ணன் என்னும் தலைவன் இதிற் புகழப்பெறுகிறான்.

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் என்ற இவ்வருந்தொடர் அகநானூற்றில்தான் முதன்முதலாகப் பயிலப் பெற்றிருக்க வேண்டும். மணிமேகலையினும் காலத்தால் முற்பட்டது அகநானூறு. அகநானூறு பண்ணனுக்குக் கூறிய இவ்வருந்தொடரை அப்படியே எடுத்துச் சாத்தனார் புத்தருக்குக் கூறுகிறார் போலும். தனக்கென்று ஒன்றானும் உள்ளான் பிறர்க்கே உறுதிக்கு உழன்றான் என்று குண்டலகேசியும் புத்தரைப் புகழ்கிறது.

**முன்றான் பெருமைக்கண் நின்றான் முடிவெய்துகாறும்**
**நன்றேநினைத்தான் குணமொழிந் தான் தனெக்கென்**
**றொன்றானு முள்ளான் பிறர்க்கே யுறுதிக் குழந்தா**
**னன்றே யிறைவ னவன்றாள் சரணங்களன்றே**

என்பது குண்டலகேசி, கடவுள்வாழ்த்து, தனக்கென ஒன்றானு முள்ளான், பிறர்க்கே உறுதிக்கு உழந்தான் என் இதனுள் கூறப்பெற்றுள்ளதைக் காண்க.

**" பிறர்க்கு அறம் முயலும் பெரியோய்"    ( 11 - 63 )**
**" பிறர்க்கு அறம் முயலும் பெரியோன்"    ( 21-178)**
**" தன் உயிர்க்கு இரங்கான் பிற உயிர் ஓம்பும்**
**மன்னுயிர் முதல்வன்"    ( 25-116-7)**

என்றும் மணிமேகலை கூறுகிறது.

"தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்", "பிறர்க்கறம் முயலும் பெரியோன்" " தன் உயிர்க்கு இரங்கான் பிற உயிர் ஓம்பும் மன்னுயிர் முதல்வன்" என்று புத்தரைப் போற்றிப் புகழும் தொடர்கள் வள்ளற்பெருமானுக்கும் பொருந்தும்.

<u>பிறவிப்பிணி மருத்துவன்</u>

**பிறவிப்பிணி மருத்துவன் இருந்தற முரைக்கும்**
**திருந்தொளியாசனஞ் சென்று கைதொழுதி**

என்று மணிமேகலை, புத்தபெருமானைப் பிறவிப்பிணி மருத்துவன் என்று கூறுகிறது.

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் என அகநானூறு புகழ்ந்த பண்ணனைப் புறநானூறு பசிப்பிணி மருத்துவன் என்று புகழ்கிறது.

பசியைப் பிணி என்றும், பசிக்குக் கொடுக்கப் படும் உணவைப் பசிப்பிணி மருந்து ஆருயிர் மருந்து என்றும் மணிமேகலை கூருகிறது.

**பசிப்பிணி என்னும் பாவி    -மணிமேகலை 11-80**

**மக்கள் தேவர் என இருசாரார்க்கும்**
**ஒத்தமுடிவின் ஓர் அறம் உரைக்கேன்**
**பசிப்பிணி தீர்த்தல் என்றே    - 12-116-18**

**பாரகம் அடங்களும் பசிப்பிணி அறுக    - 16 - 134**

என்பவை மணிமேகலையில் பசிப்பிணியைக் கூறும் இடங்களாம்.

உயிர்மருந்து, ஆருயிர் மருந்து, பசிப்பிணி மருந்து என்றெல்லாம் உணவைக் குறிக்கும் இடங்கள் பல.

**ஆங்கதிற்பெய்த ஆருயிர் மருந்து**
**மணிமேகலை 11-48**

**ஆங்கதன் பயனே ஆருயிர் மருந்தாய்**
**ஈங்கிப் பாத்திரம் என்கைப் புகுந்தது    -11-105;106**

**அகன் கரைப்பெயர்த ஆருயிர் மருந்து** - 11-1117

**ஆருயிர் மருந்தாம் அமுதசுரபி எனும்**
**மாபெரும் பாத்திரம்** - 12-114-115

**பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுகென**
**ஆதிரை இட்டனள் ஆருயிர் மருந்தென்** -16-134-135

**பங்கயப் பீடிகைப் பசிப்பிணி மருந்தெனும்**
**அங்கையின் ஏந்திய அமுதசுரபியை** -28-217-218

சோற்றையும் தண்ணீரையும் இருமருந்து என்று புறநானூறு கூறுகிறது. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைக் கோவூர்க்கிழார் பாடிய புறப்பாட்டில் (70) " **இருமருந்து விளைக்கும் நன்னாட்டுப் பொருநன்** " என்று பாராட்டுகிறார். இதற்கு உரை எழுதும் புறநானூற்று உரையாசிரியர் **சோற்றையும் தண்ணீரையும் விளைக்கும் நல்ல நாட்டுக்கு வேந்தன்** என்றெழுதுகிறார். எனவே சோறும் நீரும் இருமருந்து என்பது தெளிவாகும்.

இனிப் பசிப்பிணி மருத்துவன் பண்ணனைக் கூறும் புறநானூற்றுப் பாடலைக் காண்போம்.

**யான்வாழும் நாளும் பண்ணன் வாழிய!**
**பாணர்!காண்க, இவன் கடும்பினது இடும்பை**
**யாணர்ப் பழுமரம் புள் இமிழ்ந்தன்ன**
**ஊண் ஒலி அரவம் தானும் கேட்கும்**
**பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி**
**முட்டை கொண்டு வன்புலம் சேரும்**
**சிறுநுன் எறும்பின் சில் ஒழுக்கு ஏய்ப்ப**
**சோறுடைக் கையர் வீறுவீறு இயங்கும்**
**இருங்கிளைச் சிறாஅர்க் காண்டும் கண்டும்**
**மற்றும் மற்றும் வினவுதும், தெற்றென**
**பசிப்பிணி மருத்துவன் இல்லம்**
**அணித்தோ? சேய்த்தோ? கூறுமின் எமக்கே**

புறநானூறு 173,சிறுகுடிகிழான் பண்ணனைச் சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன் பாடியது.

சிறுகுடிகிழான் என்பது இப்பாட்டுடைத் தலைவனின் பெயர், சிறுகுடி என்பது ஊர். கிழான் என்பது வேளாளர் தலைவன் எனப் பொருள்படும் ஒரு சிறப்புப்பெயர். சிறுகுடிகிழான் பண்ணன் சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனுடைய நண்பருள் ஒருவன். இச்சோழனும் இன்னும் சில பெரும்புலவர்களும் இவனைப் பாடியுள்ளனர். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் பண்ணன் என் அகநானூறு பண்ணனைப் பாராட்டுகிறது ( பாட்டு 54) புறநானூற்றில் இவன் பசிப்பிணி மருத்துவன் எனப் பாராட்டப் பெறுகிறான். சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன் பெருமன்னன். சிறுகுடிகிழான் பண்ணன்

அவனினும் எளிய சிறுகுடியின் தலைவன். இருந்தும் பண்ணன் சோழனால் பாராட்டப் பெறுகிறான். காரணம் பண்ணனது சோற்றுக்கொடையின் வளம். பண்ணனது சிறுகுடியை நெருங்கும் போதே சாப்பாட்டுச் சப்தம் கேட்கிறது. " ஊணொலி ( ஊண் ஒலி) அரவம் தானும் கேட்கும்" ( அடி 4). சோற்றுக் கையர்களாகப் பெரியவர்களும் சிறுவர்களும் கூட்டங்கூட்டமாகச் செல்வதைக் காணலாம். " சோறுடைக்கையர் வீறு வீறு இயங்கும் இருங்கிளைச் சிறார்க்காண்டும்" (அடி 8, 9) " ஊணொலி அரவம்" , " சோறுடைக்கையர் வீறு வீறு இயங்கும் " என்ற தொடர்கள் எப்பேர்ப்பட்ட தொடர்கள். " 'ஊணொலி அரவம்" மணிமேகலையிலும் கூறப்பெறும்.

பண்ணனைப் பசிப்பிணி மருத்துவன் என்று புறநானூறு கூறுகிறது. புத்தரைப் பிறவிப்பிணி மருத்துவன் என்று மணிமேகலை கூறுகிறது. பிறவிப்பிணி மருத்துவன் என்னும் மணிமேகலை, பசிப்பிணி மருத்துவன் என்னும் புறநானூற்றின் தாக்கமாக இருக்கலாம்.

பசியை, நோய், பிணி என்று சொல்வதைப் போலவே பிறவியையும் நோய், பிணி என்று கூறுவர். பிறவி நோய், பிறவிப் பிணி என்பர்.

**பிணிக்கு, மருந்து வேண்டும்**
**பசிப்பிணிக்கு மருந்து, உணவு,**
**பிறவிப்பிணிக்கு மருந்து, ஞானம்**

**பசிப்பிணிக்கு மருந்து கொடுப்போர் பசிப்பிணி**
**மருத்துவர்**

**பிறவிப்பிணிக்கு மருந்து கொடுப்போர் பிறவிப்**
**பிணி மருத்துவர்.**

**பசிப்பிணி மருத்துவன் பண்ணன் என்றொரு வள்ளலலைப் புறநானூறு கூறுகிறது(173).**

**பிறவிப் பிணி மருத்துவன் என்று புத்தரை மணிமேகலை கூறுகிறது. (9-61).**

**"பிறவிப்பிணி மருத்துஅன் இருந்தறம் உரைக்கும்**
**திருந்தொளி ஆசனம் சென்றுகை தொழுதி"**

**9, பீடிகைகண்டு பிறப்புணர்ந்த காதை 61:62**

என்பது மணிமேகலை.

பண்ணன்பசிப்பிணி மருத்துவன்.

புத்தர் பிறவிப்பிணி மருத்துவர்

வள்ளலார் பசிப்பிணி பிறவிப்பிணி இரண்டுக்குமே மருத்துவர்.

பண்ணன் பசிப்பிணிக்கு உணவு மருந்து கொடுத்துப் பசிப்பிணி தீர்த்தாள்.

புத்தர் பிறவிப்பிணிக்கு ஞானமருந்து கொடுத்துப் பிறவிப் பிணியைத் தீர்த்தார்.

வள்ளலார் பசிப்பிணிக்கு உணவு மருந்தும் பிறவிப் பிணிக்கு ஞானமருந்தும் கொடுத்து இருபெரு நோய்களையும் தீர்க்கும் ஒரு பெரு மருத்துவராய் விளங்குகிறார்.

**" மாரனை வெல்லும் வீர நின்னடி**
**தீநெறிக் கடும்பகை கடிந்தோய் நின்னடி**
**பிறர்க்கற முயலும் பெரியோய் நின்னடி**
**துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி**
**எண்பிறக் கொழிய விறந்தோய் நின்னடி**
**கண்பிறர்க் களிக்கும் கண்ணோய் நின்னடி**
**தீமொழிக் கடைத்த செவியோய் நின்னடி**
**வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி**
**நரகர் துயர்கெட நடப்போய் நின்னடி**
**உரகர்துயர மொழிப்போய் நின்னடி**
**வணங்குத லல்லது வாழ்த்த வென்னாவிற்**
**கடங்காது"**

**11, பாத்திரம் பெற்ற காதை, 61-72**

மணிமேகலையில் பகவான் புத்தர் இவ்வாறெல்லாம் போற்றிப் புகழ்ந்து துதிக்கப் பெறுகிறார்.

"பிறர்க்கு அறம் முயலும் பெரியோய்" என்பதோடு முன்னே எடுத்துக்காட்டிய தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் என்பதை இணைத்துக் காணவேண்டும்.

"கண்பிறர்க்கு அளிக்கும் கண்ணோய்" என்பதற்கு இருவகைப் பொருள் உண்டு. ஞானக்கண்ணைப் பிறர்க்கு வழங்குகிற ஞானக்கண்ணோய் என்று ஒருபொருள். ஒருசமயம் இந்திரன் வந்து புத்தரின் கண்களைத் தானமாகக் கேட்டான் என்றும், புத்தர் கொடுத்துவிட்டார் என்றும் புத்த ஜாதகக் கதையொன்று கூறும். இது ஊனக்கண்ணையும் தானம் செய்த வரலாறு: இது இரண்டாவது பொருள்.

## மணிமேகலையில் அன்னதானம் பசிக்கொடுமை

பசிக்கொடுமையையும், அப்பசிக்கு உணவளிக்கும் அன்னதானத்தின் சிறப்பையும் மணிமேகலை கூறுவது போன்று வேறு எந்நூலும் கூறவில்லை. வள்ளலார் ஒருவரே கூறுகிறார்.

**குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்**

**பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்**
**நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்**
**பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்**
**பசிப்பிணி என்னும் பாவி, அது தீர்த்தோர்**
**இசைச்சொல் அளவைக்கு என்நா நிமிராது**

**-11, பாத்திரம் பெற்ற காதை, 76-81**

என்பது மணிமேகலை. பசிக்கொடுமையையும் அது தீர்த்தலின் சிறப்பையும் கூறுவதாகும்.

பசிப்பிணி என்னும் பாவி
குடிப்பிறப்பு அழிக்கும் - உயர்ந்த குடிப்பிறப்பைக் கெடுக்கும்
உயர்ந்த குடிப்பிறப்புக்கு ஏலாத செயல்களைச் செய்யச் செய்யும்

விழுப்பம் கொல்லும் - சிறப்பினைக் கெடுக்கும்
கல்விப் பெரும்புணை

விடூஉம் - கற்ற கல்வியாகிய பெரிய துணையையும் நீக்கும்

நாண் அணிகளையும் - நாணமாகிய அணிகலத்தை அகற்றும்.
வெட்கத்தை கெடுக்கும்

மாண் எழில் சிதைக்கும்- மாட்சியுடைய அழகையும் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு - மனைவியோடு
புறங்கடை நிறுத்தும் - பிச்சைக்காக இன்னொரு வீட்டார் கடைத் தலையில் நிற்கச் செய்யும்

பசிப்பிணி என்னும்பாவி - பசிப்பிணியாகிய பாவி
அதுதீர்த்தோர் - அப்பசிக்கு உணவு கொடுத்துப் பசியைத் தீர்த்தோர்

இசைச்சொல் அளவைக்கு- புகழைக் கூறுவதற்கு
என் நாநிமிராது - என்னுடைய நாக்குக்குப் பலம் போதாது

**<u>பசிக்கொடுமையால் விசுவாமித்திரர்</u>**
**<u>நாய்மாமிசத்தைத் தின்னத் துணிந்தது</u>**

காட்டில் தவஞ்செய்து கொண்டிருந்த விசுவாமித்திர முனிவர் பஞ்சகாலத்தில் பசிக்கொடுமையால் நாய் மாமிசத்தைத் தின்னத் துணிந்தார் என்ற செய்தி மணிமேகலையில் கூறப்பெறுகிறது.

**“ புன்மரம் புகையப் புகையழல் பொங்கி**
**மன்னுயிர் மடிய மழைவளம் கரத்தலின்**
**அரசுதலை நீக்கிய அருமறை அந்தணன்**

**இருநில மருங்கின் யாங்கணுந் திரிவோன்**
**அரும்பசி கலைய ஆற்றுவது காணான்**
**திருந்தா நாயூன் தின்னுதல் உறுவோன்**
**இந்திர சிறப்புச் செய்வோன் முன்னர்**
**வந்து தோன்றிய வானவர் பெருந்தகை**
**மழைவளந் தருதலின் மன்னுயிர் ஓங்கிப்**
**பிழையா விளையுளும் பெருகிய தன்றோ”**

**(-11,பாத்திரம்பெற்ற காதை 82-91)**

என்பது மணிமேகலை.

இச்செய்தியை மணிமேகலை மட்டும் கூறவில்லை. மனுதரும சாத்திரமும் கூறுகிறது. மணிமேகலைக்கு உரை எழுதும் டாக்டர் உ.வே.சாமிநாதையர் மனுதரும சாத்திரத்தை எடுத்துக் காட்டுகிறார். “விசுவாமித்திர முனிவர் பசியின் கொடுமையால் நாயூன் தின்பதற்கு முயன்றாரென்பதை மனுஸ்ருமிதி 10-ஆம் அத்தியாயம் 108-ஆம் சுலோகத்திற் காண்க” என்பது ஐயரவர்கள் உரைக்குறிப்பு. மணிமேகலையில் இதைப் பார்த்தபின் மனுஸ்மிருதியையும் பார்த்தோம்.

<u>மனுஸ்மிருதி</u>

மனுஸ்மிருதி ( மனுதரும சாத்திரம்) பத்தாம் அத்தியாயத்தில் பிராமணன் ஆபத் தருமம் என்ற இடத்தில் உதாரணம் என்ற தலைப்பில் 108-ஆம் சுலோகம்;

**“தருமா தருமங்களை யறிந்த விசுவாமித்திரன்**
**பசியினால் தூண்டப்பட்டுச் சண்டாளன்**
**கையிலிருந்த நாயின் முழங்கால் மாம்ஸத்தை**
**வாங்கிச் சாப்பிட யத்தனித்தார். அதனால்**
**அவருக்குப் பாப முண்டாகவில்லை”**

என்று கூறுகிறது.

**விசுவாமித்திரர்** நாய் மாமிசத்தைத் தின்றார் என்று மணிமேகலையும் மனுதருமமும் கூறவில்லை. தின்ன எண்ணினார்(தின்னுதலுறுவோன்)என்று மணிமேகலையும், சாப்பிட எத்தனித்தார் என்று மனுதரும சாத்திரமும் கூறுகின்றன. வைதிகர்கள் உண்பதற்கு முன் வைச்வதேவம் என்னும் வழிபாட்டைச் செய்வர். விசுவாமித்திரரும் நாயூன் தின்ன யத்தனித்தவர் தின்னத் தொடங்குமின் வழிபாடு செய்தார். வழிபாட்டுக்கு மகிழ்ந்த இந்திரன் அவர்முன் தோன்றி மழை பொழிவித்து வளம் பெருக்கினான். மழைபொழிந்து வளம் பெருகவே முனிவரும் நாயூன் தின்னாதொழிந்தார்.

நாயூன் தின்னத் துணிந்தால் அவருக்குப் பாப முண்டாகவில்லை என்று மனுதருமம் கூறுகிறது. ஆபத்தருமம் (ஆபத்துக் கால அறம்) என்கிறது. வள்ளுவர் தருமமும் வள்ளலார் தருமமும் இதனை ஒவ்வா. விசுவாமித்திரர் நாய் மாமிசத்தைத் தின்னத் துணிந்தது சரியா? தவறா? அதனால் அவருக்குப் பாவமுண்டாயிற்றா? இல்லையா? என்ற விவாதத்தை இங்கு நாம் எடுத்துக்கொள்ளவில்லை. அது வேறு

செய்தி. பசிக் கொடுமை விசுவாமித்திரர் போன்ற முனிவர்களையும் விட்டுவிடவில்லை. உண்பதற்கு ஒன்றுங் கிடைக்காத போது, நாய் மாமிசத்தையாவது உண்டால் என்ன என்று துணியுமளவுக்கு, சாதாரண ஆளை அல்ல, விசுவாமித்திரமகா முனிவரையே செய்ததுபசிக்கொடுமை என்பதே இங்குக் கூற வந்த செய்தி.

## உண்டிக்கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே

**ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்**
**ஆற்றாமாக்கள் அரும்பசி களைவோர்**
**மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை**
**மணிதிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**
**உயிர்க்கொடை பூண்ட உரவோய் ஆகிக்**
**கயக்கறு நல் அறம் கண்டனை என்றலும்**

**-11-பாத்திரம் பெற்ற காதை, 92-98**

ஆற்றக்கூடியவர்கள், ஆற்ற மாட்டாதவர்கள் என மக்கள் இருவகை.

ஆற்றுநர் -- ஆற்றக்கூடியவர்கள்,ஆற்றலுள்ளவர்கள் பொறுக்கும் (பொறுத்துக் கொள்ளும்)வலிமைஉடையவர்கள். செல்வர்.

ஆற்றாமாக்கள் -- ஆற்ற மாட்டாதவர்கள், வறியோர்

ஆற்றநர்க்கு அளிப்போர் -- ஆற்றக்கூடியவருக்குக் கொடுப்போர்

அறவிலை பகர்வோர் -- அறத்தை விலைக்கு விற்போராவர்

ஆற்றாமாக்கள் -- ஆற்ற மாட்டாதவர்களுடைய

அரும்பசி -- வருத்தும் பசியை

களைவோர் -- போக்குவோர்

மேற்றே -- மேலதே

மெய்ந்நெறிவாழ்க்கை -- உண்மையான வாழ்க்கை.

ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர் என்பதோடு, **“இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும் அறவிலை வாணிகன் ஆய் அலன்” என்ற புறநானூற்று(134) வரிகளைச் சேர்த்து, எண்ணிப்பார்க்க வேண்டும்.**

**அறவிலை பகர்வோர் - என்பது மணிமேகலை**

அறவிலை வாணிகன் - என்பது புறநானூறு

ஆற்றிக் கொள்ளக் கூடியவர்களுக்குக் கொடுப்பவர்கள் தர்மத்தை விலைக்கு விற்பவராவர். ஆற்றமாட்டாதவர்களுக்குக் கொடுப்பதே உண்மையான வாழ்க்கை. மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்- மண்செறிந்த இந்த உலகத்தில் வாழ்பவருக்கெல்லாம். உண்டிகொடுத்தோர்-உணவைக் கொடுத்தவர்கள். உயிர்கொடுத்தோரே - உயிரைக் கொடுத்தவர்களாவர்.

“உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே” என்பது மணிமேகலை, புறநானூறு ஆகிய இரண்டு நூல்களிலுமே வருகிறது. மணிமேகலையில் வருமிடத்தை மேலே கண்டோம். புறநானூற்றில் வரும் இடத்தைக் கீழே காண்போம்:

முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்
பரந்து பட்ட வியன் ஞாலம்
தாளின் தந்து தம்புகழ் நிறீஇ
ஒருதாம் ஆகிய உறவோர் உம்பல்!
ஒன்றுபத்து அடுக்கிய கோடிகடை இரீஇய
பெருமைத் தாக நின் ஆயுள்தானே!
நீர்தாழ்ந்த குறுங்காஞ்சிப்
பூக்கதூஉம் இனவாளை
நுண் ஆரல் பருவரால்
குரூஉக்கெடிற்ற குண்டு அகழி
வான் உட்கும் வடிநீள்மதில்
மல்லல் மூதூர் வயவேந்தே!
செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும்
ஞாலம் காவலர் தோள்வலி முருக்கி
ஒருநீ ஆகல் வேண்டினும், சிறந்த
நல் இசை நிறுத்தல் வேண்டினும்,மற்றதன்
தகுதிகேள், இனி, மிகுதியாள!
நீரின்றி அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே
வித்திவான் நோக்கும் புன்புலம் கண் அகன்
வைப்பிற்று ஆயினும் நண்ணி ஆளும்
இறைவன் தாட்கு உதவாதே:அதனால்
அடுபோர்ச் செழிய! இகழாது வல்லே
நிலன்நெளி மருங்கில் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம இவண் தட்டோரே
தள்ளாதோர் இவண் தள்ளா தோரே,

- புறநானூறு 18

பாண்டியன் நெடுஞ்செழியனைக் குடபுலவியனார் பாடியது. இதனுடன் மணிமேகலையை ஒத்துப்பார்க்க.

**ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்**
**ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்**
**மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை**
**மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே**
**உயிர்க் கொடைபூண்ட உரவோய் ஆகிக்**
**கயக்கறு நல்அறம் கண்டனை என்றலும்**

**மணிமேகலை11,பாத்திரம் பெற்றகாதை,92-98**

மேலெடுத்துக் காட்டிய புறநானூற்றுப் பாடலில்,

**" நீர் இன்றி அமையா யாக்கைக்கு எல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே**
**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**
**உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே**
**நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு**
**உடம்பும் உயிரும் படைத்திசி னோரே"**

என்னும் ஆறு அடிகளில் ஐந்து செய்திகள் மிக அழகாகக் கூறப்பெறுகின்றன.

1. நீரின்றி அமையா யாக்கை

2. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே.

3. உண்டி முதற்றே உணவின் பிண்டம்.

4. உணவெனப்படுவது நிலத்தொடு நீரே.

5. நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு உடம்பும் உயிரும் படைத்திசினோரே

இவற்றை ஒவ்வொன்றாகக் காண்போம்.

**<u>1.நீர் இன்றி அமையா யாக்கை</u>**

யாக்கை - உடம்பு

நீரின்றி அமையா - நீர் இல்லாமல் அமையாது.

நீரின்றி உடம்பு அமையாது. உயிர் வாழ்க்கையே, உலக வாழ்க்கையே அமையாது.

**" நீரின்றமையாது உலகு"  -- குறள் 20**

என்றார் திருவள்ளுவர்.

**"நீரின்றமையா உலகம் போல "** **-- நற்றிணை 1**

**"மழையின்றி மாநிலத்தார்க் கில்லை"**

**-நான்மணிக்கடிகை 47**

நீரின்றி அமையா யாக்கை என்பதற்கு, நீரோடு சோற்றையும்(இனம்பற்றிச்) சேர்த்துக் கொள்க. நீரும் சோறும் இன்றி உடம்பு அமையாது.

**<u>2.உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே</u>**

'பசி உயிர்போகிறது' என்கிறோம் 'பசி உயிரை எடுக்கிறது' என்கிறோம். போய்கொண்டிருக்கும் உயிரை, எடுபட்டுக்கொண்டிருக்கும் உயிரை, உணவு கொடுத்து நிறுத்துவோர் உயிர்கொடுதோர் தானே? பசி உயிரைக் கொல்லும். உணவு உயிரைக் கொடுக்கும். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் தானே?

**<u>3. உண்டி முதற்றே உணவின் பிண்டம்</u>**

**உண்டி முதற்றே - உணவையே முதலாக உடையது**
**உணவின் பிண்டம் - உணவால் ஆகிய உடம்பு**

உடம்பு உணவால் ஆகியதாதலின், உடம்பை உணவின் பிண்டம் என்றார்.

**"மக்கள் யாக்கை உணவின் பிண்டம்"** என்பது மணிமேகலை (10:90)

'மக்கள் யாக்கை உணவின் பிண்டம்', 'உண்டி முதற்றே உணவின் பிண்டம்' என்பன எவ்வளவு பெரிய பேருண்மை. கற்றுவல்ல புலவர்கள் இவ்வாறு புலமை நயத்தோடு அருமையாகக் கூறினார்கள். கல்லாத மாந்தரும் உடம்பை, "சோற்றால் வைத்த சுவர்" ' சோற்றாலடித்த சுவர்' என்று சொல்லக் கேட்கிறோம். மண்ணை நீர் விட்டுப் பிசைந்து சுவர் வைப்பது போன்று, சோற்றைத் தண்ணீர் விட்டுப் பிசைந்து உடம்பாகிய சுவர் வைக்கப்பட்டிருக்கிறது. சோறும் நீரும் இன்றேல் உடம்பில் உயிர் ஒட்டிக்கொண்டிராது. பிரிந்து போய்விடும். சோற்றுப் பசையால்தான் உடம்பும் உயிரும் ஒட்டவைக்கப்பட்டிருகின்றன. எல்லாப் பசைகளிலும் ' பசை ' மிக்கது சோற்றுப்பசை. காகிதம் போன்ற பொருள்களைப் பசை தடவி ஒட்டினால் பசை காய்ந்த பின்பே ஒட்டு வலிவாகும். ஈரமாக இருக்கும் வரை ஒட்டு வலிவாய் இராது; பிய்த்துக்கொண்டு வந்துவிடும். உடம்பையும் உயிரையும் ஒட்டவைத்திருக்கும் சோற்றுப் பசையோ எப்போதும் ஈரமாகவே (ஈரப்பசையாகவே) இருக்க வேண்டும். காயக்கூடாது. காய்ந்தால் உயிரும் உடம்பும் பிய்த்துக்கொண்டு போய்விடும். சோற்றுப்பசை இருக்கின்ற வரை, ஈரமாகவே இருக்கின்றவரை உயிரும் உடம்பும் ஒட்டிக்கொண்டிருக்கும் பசை காய்ந்தால் உடம்பிலிருந்து உயிர் பிய்த்துக்கொண்டு போய்விடும். உடம்பை உணவின் பிண்டம் என்றது எவ்வளவு பொருத்தமானது.

**4. உணவெனப்படுவது நிலத்தொடு நீரே**

உணவு என்பது நிலமும் நீரும். நிலத்தில் விளையும் நெல் முதலிய கூலங்களை நிலம் எனக் குறித்தார். நிலமும் நீரும் என்பதற்கு, நெல்லும் நீரும், சோறும் நீரும் என்பது பொருள்.

**5. நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு உடம்பும் உயிரும் படைத்திசி னோரே**

'நீரையும் நிலத்தையும் ஒருவழிக் கூட்டினவர்கள் உடம்பையும் உயிரையும் படைத்தவராவர்' என்பது பழைய உரை.

நீர் நேரே உணவாகிறது. நிலத்திலிருந்து நெல் முதலிய உணவுப் பொருள்களை நாம் விளைவித்துக் கொள்ளவேண்டும். நீர்நிலைகளையும் நிலவிளைவையும் கூட்டினவர்கள் உடம்பையும் உயிரையும் படைத்தவராவர் என்பது பொருள்.

புறநானூற்று வரிகளை மீண்டும் ஒருமுறை படியுங்கள். இனி, மணிமேகலைக்கு வருவோம்.

**"மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"**

மண் செறிந்த இவ்வுலகத்தில் வாழ்பவர்க்கெல்லாம் உணவு கொடுத்தவர் உயிர் கொடுத்தவராவார்.

**" உயிர்க்கொடை பூண்ட உரவோய் ஆகி "**

உயிர்க்கொடை - உயிரைக் கொடுத்தல். உரவோய் ஆகி - வலிய அறிவினையுடையோய் ஆகி.

**பசிக்கு உணவு கொடுத்தல் " உயிர்க்கொடை "**
**உணவு கொடுத்தோர் உயிர்க்கொடை பூண்ட உரவோர்.**
**நாமும் கூடியவரை உயிர்க்கொடை பூண்போமாக.**

## அமுதசுரபி

## ஆபுத்திரன், மணிமேகலை அன்னதானம்

'அமுதசுரபி ' என்றால் இன்று எத்தனை பேருக்குத் தெரியும்.

அது ஒரு சூப்பர் மார்க்கெட் என்பார் சிலர்.

அது ஒரு பத்திரிகை என்பார் சிலர்.

அது ஓர் அட்சய பாத்திரம், அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரம் என்பது பலருக்குத் தெரியாது.

மணிமேகலையில் வரும் அமுதசுரபி வரலாற்றைச் சுருங்கக் காண்போம்.

“வாரணாசி” ( காசி )

அங்கு “ ஓர் மறைஓம்பாளன் “ (மறையவன் - அந்தணன்) “ஆரண உவாத்தி “ (வேத ஆசிரியன், வேத உபத்தியாயன்).

பெயர் - அபஞ்சிகன்.

அவன் மனைவி சாலி.

கற்பிற் குன்றினாள். கணவனுக்கு அபராதம் (பிழை) செய்தாள்.

அதற்குத் தண்டமாகக் கன்னியாகுமரிக்கு நீராட வந்தாள்.

(காசியில் கற்பிழந்த பார்ப்பணிக்குப் பரிகாரம் (தண்டம்) கன்னியாகுமரியில் தீர்த்தமாடுதல் என்பதைக்கவனிக்க.).

குமரியாடித் திரும்புபவள் கொற்கை அருகே ஓர் இரவில் ஆண் குழவி ஒன்றை ஈன்றாள்.

பெற்ற குழந்தைக்கு இரங்காமல் அங்கேயே தோட்டத்தில் மறைவிடத்தில் விட்டுப் பிரிந்தாள்.

தாயில்லாக் குழவியின் அழுகுரல் கேட்டுஆ(பசு) ஒன்று வந்து நாவால் நக்கியும் பால் ஊட்டியும் ஏழு நாள்வரை காப்பாற்றியது.

ஏழாம் நாள்,வயணங்கோடு என்னும் ஊரினன், இவனும் அந்தணன், பெயர் இளம்பூதி, வழிப்போக்கனாக வந்தவன் குழந்தையை எடுத்துச் சென்று வளர்த்தாள்.

குழந்தை ஆவினால் முதலில் வளர்க்கப் பெற்றதால் ஆபுத்திரன் என்று பெயர் பெற்றான். ஆபுத்திரனுக்கு வயது வந்தது. வளர்ந்து பெரியவனானான்.

அவ்வூரில் அந்தணர் மனை ஒன்றில் வேள்வி நடந்தது. “புலை சூழ் வேள்வி” பலி கொடுக்கப் பசு ஒன்று கொம்பில் மாலை சுற்றிக் கட்டப்பட்டிருந்தது.

பசுவின் துயரைக் காணப் பொறாத ஆபுத்திரன் அதனைக் காப்பாற்ற வேண்டி நடு இரவில் அதனை அவிழ்த்துக் கொண்டு அவ்வூரை விட்டு அகன்றான்.

அதை அறிந்த அந்தணர்கள் ஆபுத்திரனை ஊர்ப்புறக் காட்டில் மறித்தார்கள். அடித்தார்கள்.

அதைப் பொறுக்கப் பெறாத அந்த யாகப் பசு, யாகத் தலைமை உபாத்தியாயனைக் கொம்பால் குத்தி (முட்டி)க் குடல் வெளியே வர அவனைச் சாய்த்து விட்டுக் காட்டுக்குள் ஓடிப்போயிற்று.

அந்தணர்களுக்கும் ஆபுத்திரனுக்கும் நீண்ட வாக்குவாதம் நடந்தது. பசு மாமிசத்திற்கு ஆசைப்பட்டுக் கொன்று தின்னக்களவாடினான் என்று அந்தணர்கள் குற்றஞ் சுமத்தினார்கள்.

வளர்ப்புத் தந்தை இளம்பூதியும் ஆபுத்திரனைத் தன் வீட்டிற்கு வராதே என்று சொல்லி விட்டான்.

அக்கிரகாரந் தோறும் பிச்சையெடுத்துக் கொண்டே ஆபுத்திரன் செல்லுகிறான். அக்கிரகாரங்களிலெல்லாம் ஆபுத்திரனைப் பசுமாடு திருடி என்று திட்டி அவன் பிச்சைப் பாத்திரத்தில்கல்லைப் போடுகிறார்கள். யாரும் சோறு போடவில்லை, கல்லையே போட்டார்கள்.

ஆபுத்திரன் மதுரை போய்ச் சேர்ந்தான்.

அங்கு, சிந்தாதேவியின் கோயில், செழுங்கலை நியமம், அதன்முன்றிலில் அம்பலப்பீடிகை, அங்கே தங்கினான்.

ஊரில் பிச்சையேற்றுவந்து, " காணார், கேளார், கால் முடப்பட்டோர், பேணுநர் இல்லோர், பிணி நடுக்குற்றோர் யாவரும் வருக என்று இசைத்து" அவர்களுக்கெல்லாம் ஊட்டி, மிகுந்ததைத் தானும் உண்டு. ஓட்டைத் தலைக்கு வைத்து உறங்குவான்.

மழை காலம் ஒருநாள் நடு இரவு. பலர் வந்து விட்டனர். அவர்களுக்குக் கொடுக்க ஒன்றுமில்லை. ஆபுத்திரன் வருந்தினான்.

அவன் வருத்தத்தைப் பொறாத சிந்தாதேவி அவன் முன் தோன்றி தன் கைப் பாத்திரத்தை அவன் கையில் கொடுத்தாள். அது தான் அட்சய பாத்திரமாம் அமுதசுரபி. அதைக் கொடுக்கும் போது சொன்னாள்;

**" நாடு வறங்கூரினும் இவ்வோடு வறங்கூராது**
**வாங்குநர் கையகம் வருந்துதல் அல்லது**
**தான் தொலைவில்லாத் தகைமையது என்றே"**

(நாடு முழுவதற்குமே பஞ்சம் வந்தாலும் இந்த ஓட்டுக்குப் பஞ்சம் வராது. இதிலிருந்து கொடுக்கக் கொடுக்க வாங்குபவர்கள் கை வலிக்குமே தவிர, இதிலிருந்து எடுக்க எடுக்கக் குறையாது. வளர்ந்து கொண்டே போகும்)

ஆபுத்திரன் அமுதசுரபியை வைத்துக் கொண்டு அறஞ்செய்தான். பழுத்த மரத்தில் பறவைகள் ஒலியைப் போல அவனைச் சுற்றி இரப்போர் ஆரவாரம்.

இது இந்திரனுக்குப் பொறுக்கவில்லை. இந்திரனின் ஆசனம் ஆட்டங் கண்டது.

பூவுலகில் (மண்ணுலகில்) யாரேனும் அறம் மிகுதியாகச் செய்து இந்திர பதவி அடையத் தக்கவரானால், தேவலோகத்தில் இந்திரனது ஆசனம் நடுங்குமாம். பாண்டு கம்பள நடுக்கம் என்று இது இலக்கியங்களிற் கூறப்படும்.

இந்திரன் வந்தான். யாசகன் பொல வந்து ஆபுத்திரனைக் கண்டு போற்றித் தேவருலகுக்கு வந்து இன்பந்துய்க்க அழைத்தான்.

இங்குப் புண்ணியம் செய்தோர் அங்கு அனுபவிக்கிறார்களே தவிர, அங்கு, தானம் இல்லை, தர்மம் இல்லை, தவம் இல்லை, முயற்சி இல்லை, எனக்கு அங்கு என்ன வேலை, நான் அங்கு வாரேன் என்றான் ஆபுத்திரன்.

இவனது அறவளத்தை அடக்கக் கருதிய இந்திரன் பாண்டி நாடெங்கும் மழை வளம் பெருகச் செய்துவிட்டான். நாடெங்கும் வளம் பெருகியதால் ஆபுத்திரனுக்கும் அமுதசுரபிக்கும் வேலையில்லாது போயிற்று.

சாவக நாட்டிலிருந்து மதுரைக்கு வந்த வணிகர்கள். சாவக(ஜாவா)நாட்டில் பஞ்சம் என்று சொல்லக்கேட்டு அங்குப்போய் அறஞ்செய்வோமென்று அவர்களுடன் ஆபுத்திரன் புறப்பட்டான்.

சாவக நாடு செல்லும் வழியில் மணிபல்லவம் என்னும் தீவில் கப்பலை நிறுத்தி எல்லாரும் ஒருநாள் தங்கினர். தீவைச் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்த ஆபுத்திரன் கப்பலைத் தவற விட்டுவிட்டான். இவன் ஏறிவிட்டான் என்று எண்ணி அவர்கள் கப்பலை நகர்த்திச் சென்று விட்டனர்.

கப்பலை விட்டுவிட்ட ஆபுத்திரன் மணிபல்லவத் தீவில் வாழ்வார் யாருமின்மையால் தான் ஒருவன் மட்டுமே இத்தீவில் இருந்து என்ன செய்வதென வருந்தினான். அமுதசுரபியைக் கைக்கொண்டு தானொருவன் மட்டும் வாழ்வதா என்று எண்ணி, வாழ விரும்பாதவனாய், அத்தீவிலிருந்த கோமுகி என்னும் பொய்கையில் அமுதசுரபியை மூழ்கவிட்டு, ‘ஆண்டுக்கு ஒருநாள் நீமேலே தோன்றுவாயாக! அருளறம் பூண்டோர், ஆருயிர் ஓம்புவோர் யாரேனும் வரின் அவர் கைப்புகுவாய்! என்று சொல்லி, உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்தான்.

கோமுகிப் பொய்கையில் நீரில் அமிழ்ந்த அமுதசுரபி ஆண்டுக்கு ஒருநாள் புத்தர் அவதரித்த வைகாசிப் பௌர்ணமி நாளில் நீருக்கு மேலே வரும்.

ஓர் ஆண்டு வைகாசிப் பௌர்ணமியில் மணிமேகலை மணிபல்லவத் தீவுக்கு வர நேர்கிறது. அமுதசுரபி மணிமேகலையின் கையிற் புகுகிறது. மணிமேகலை மணிபல்லவத்திற்கு வருவதும் அமுதசுரபி அவள் கைப்புகுவதும் ஒரு பெருங்கதை.

அமுதசுரபியைப் பெற்ற மணிமேகலை, முதன் முதலாக அதில் ஆதிரை என்பாளிடம் பிச்சை ஏற்பதும் அறஞ்செய்யத் தொடங்குவதும், செய்வதும், அது போன்றே ஒரு பெருங்கதை.

சிறைச்சாலைக்குச் சென்று சிறைவாசிகளுக்கு அறங்கூறுவதையும் பிரசாதம் கொடுப்பதையும் இவை போன்றவற்றையும் இன்று நாம் புதிதாகச் செய்யும்

பணியாகக் கருதுகிறோம். மணிமேகலை அன்றே சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக ஆக்கியிருக்கிறாள். " சிறைக்கோட்டம் அறக்கோட்டமாகிய காதை" என்றே மணிமேகலையில் ஒரு பகுதி உண்டு. மணிமேகலை சிறைவாசிகள் அனைவர்க்கும் ஒரே பாத்திரத்திலிருந்து எடுத்து அமுதூட்டுவதைக் கண்ட காவலர்கள் அரசனிடம் சென்று கூறுகின்றனர். அரசன் விசாரிக்கிறான். மணிமேகலை சிறைவாசிகளை விடுவிக்கக் கூறுகிறாள். சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்குக என்கிறாள். அரசனும் சிறை வீடு செய்கிறான். சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆகிறது.

நாம் இங்கு மிகவும் சுருங்கக் கூறினோம். மணிமேகலை நூல் விரிவாகப் படித்து அறியத் தக்கது. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள். ஆயினும் சிலப்பதிகாரம் பரவிய அளவுக்கு மணிமேகலை பரவவில்லை. சிலம்பில் சமய சமரசம் உண்டு. மேகலையில் சமய வாதம் உண்டு. பௌத்த சமயப் பிரசாரம் உண்டு. எனினும் அன்னதானத்தின் சிறப்பைக் கூறும் பழந்தமிழ் நூல் மணிமேகலையை விடச் சிறந்தது வேறொன்றுமில்லை. " மணிமேகலை நூல் நுட்பங் கொள்வதெங்கண்?" என்று துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் திருவெங்கைக் கோவையில் மணிமேகலை நூலைப் பாராட்டுகிறார். சமய சாத்திர நுட்பங்களே அன்றி அன்னதானநுட்பமும் அதில் அடங்கிக் கிடக்கிறது. அறம் தழைக்கவும் அன்னதானம் செழிக்கவும் மணிமேகலையைப் பாடஞ் சொல்ல வேண்டும், பரப்பவேண்டும்.

மணிமேகலையில் தொட்டவிடமெல்லாம் அன்னதான அறம் தட்டுப்படுகிறது.

மணிமெகலை முப்பது காதைகளை உடையது. முதற்காதை விழாவறை காதை. இந்திரவிழாவை அறிவிப்பது.

**பசியும் பிணியும் பகையுநீங்கி**
**வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி**
**அணிவிழா அறைந்தனர் அகநகர் மருங்கென்**

என்று விழாவறைகாதை நிறைவு பெறுகிறது. சிலப்பதிகாரத்திலும் இந்த வாழ்த்து இப்படியே எழுத்து மாறாமல் வருகிறது ( 5.72, 73).

காவிரிப்பூம்பட்டினத்தில் சக்கரவாளக்கோட்டத்தில் "உலக அறவி " என்னும் ஓர் அறச்சாலை இருந்தது. ஒரே சமயத்தில் பலர் உள்ளே புகுவதற்கு ஏதுவாக அகன்ற வாயிலை உடையது அவ் உலக அறவி,

**சக்கரவாளக் கோட்டத் தாங்கட்**
**பலர்புகத் திறந்த பகுவாய் வாயில்**
**உலக வறவியின் ஒருபுடை இருத்தலும்**

**(7. துயிலெழுப்பிய காதை 91-93)**

என்பது மணிமேகலை வரிகள்.

உலக அறவி - ஊர் அம்பலம் ; எல்லாச் சாதியாரும் வந்து தங்குவதற்குரிய தருமசாலை; இதனை ‘ லோகோபகாரிக ‘ என்பர் வடநூலார் என்று ஐயரவர்கள்குறிப்புரை எழுதுகிறார். உலக அறவி என்ற பெயரே எவ்வளவு நன்றாக இருக்கிறது. வடலூரில் வள்ளலார் நிறுவியருளிய சத்திய தருமச்சாலையும் உலக அறவியே. உலக அறவியின் வாயில் “ பலர்புகத் திறந்த பகுவாய் வாயில்”, பலர் உள்ளே புகும்படி அகன்ற வாயில், திறந்த வாயில், வடலூரில் வள்ளற்பெருமான் அமைத்தருளிய தருமச் சாலையின் வாயிலும் பலர் புகத் திறந்த பகுவாய் வாயில்.

சிலப்பதிகாரத்தில் கவுந்தியடிகள் வருவதுபோல, மணிமேகலையில் அறவாண அடிகள் வருகிறார். அறவாணர் என்ற பெயரே அருமையான பெயர். மணிமேகலைக்கு ஆபுத்திரன் வரலாற்றையும் அமுதசுரபியின் பெருமையையும் கூறியவர் இவரே.

**ஆருயிர் மருந்தாம் அமுத சுரபி எனும்**
**மாபெரும் பாத்திரம் மடக்கொடி பெற்றனை**
**மக்கள் தேவர் என இருசாரார்க்கும்**
**ஒத்தமுடிவின் ஓரறம் உரைக்கேன்**
**பசிப்பிணி தீர்த்தல் என்றே...**

என்பது அறவணர்த்தொழுத காதை, வரிகள் 114-118

மக்கள் தேவர் ஆகிய இருசாராருக்கும் ஒத்த முடிபின் ஓர் அறம், பொதுவான அறம் ஒன்றைச் சொல்லுவேன், பசிப்பிணி தீர்த்தல் என்று அறவண அடிகள் அருளுகிறார்.

**காணார் கேளார் கான்குடப் பட்டோர்**
**பேணுனர் இல்லோர் பிணிநடுக்குற்றோர்**
**யாவரும் வருகவென் றிசைத்துடன் ஊட்டி**
**உண்டொழி மிச்சில் உண்டு, ஓடு தலை மடுத்துக்**
**கண்படை கொள்ளும் காவலன் தான் என்.**

என்று ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை முற்றுப்பெறுகிறாது. (111-115). குருடர், செவிடர், நொண்டி எனக் கொடூரமான சொற்களாற் கூறாது காணார், கேளார், கான்முடப்பட்டோர் என்று இனிய சொற்களாற் கூறுகின்றார். காணார், கேளார் முதலிய யாவரும் வருக என்று அழைத்து அன்னமளித்து, மிச்சத்தைத் தான் உண்டு, ஓட்டையே தலைக்கு வைத்துப்படுத்துக் கொள்ளுகிறான் ஆபுத்திரன். காணார் கேளார் என்று சொல்லும் நயம்தான் என்னே! பின்னே 28-ஆவது கச்சிமாநகர் புக்க காதையிலும், “ காணார் கேளார் கான்முட மானோர், பேணாமாக்கள், பேசார், பிணித்தோர், படிவநோன்பியர், பசிநோயுற்றோர் மடிநல்கூர்ந்த மாக்கள் யாவரும், பன்னூறாயிரம் விலங்கின் தொகுதியும், மன்னுயிர் அடங்கலும் வந்து ஒருங்கீண்டி” ஆருயிர் மருந்து அருந்திய செய்தி கூறப்பெறுகிறது.

**அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்**
**மறவாது இதுகேள் மன்னுயிர்க்கு எல்லாம்**
**உண்டியும் உடையும் உறையுளும் அல்லது**
**கண்டது இல் எனக் காவலன் உரைக்கும்**

-25 ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்தகாதை 228-231

**அறம் எனப்படுவது யாது என்று கேட்டால் -**
**மன்னுயிர்க்கெல்லாம் - உலக உயிர்களுக்கு எல்லாம்.**
**உண்டியும் உடையும் உறையுளும் அல்லது**
**கண்டது இல் - கண்டதில்லை.**

உண்ண உணவு

உடுக்க உடை

இருக்க உறையுள்

இவையே அடிப்படைத் தேவை. இவற்றை அளிப்பதே அறம்.

மணிமேகலையின் அன்னதானத்திற்குப் பின்பு நாட்டில் பெரிய அன்னதானம் வள்ளலாரின் அன்னதானமே. வள்ளலாரின் திருக்கரமே அமுதசுரபி.

அள்ள அள்ளக் குறையாது அமுதம் சுரக்கும் பாத்திரம் அமுதசுரபி. ஒரு சமயம் அகால நேரத்தில் தருமச்சாலைக்குப் பலர் வந்து சேர்ந்தனர். சமைத்த உணவு சிறிதே எஞ்சியிருந்தது. அவ்வளவு பேருக்கும் போதாது என்று சாலைத் தொண்டர்கள் பெருமானிடம் கூறினர். பெருமான், பிச்! இலைபோடும்! என்று சொல்லித் தன் கரங்களாலேயே பரிமாறத் தொடங்கினார். வந்த அனைவரும் உண்டபின்னும் உணவு எஞ்சியிருந்தது. வள்ளற்பெருமான் திருக்கரமே அமுதசுரபி ஆயிற்று.

## <u>அருகர் என்பேன் புத்தர் என்பேன்</u>

திருவருட்பாப் பாடலொன்றில் வள்ளலர் அருகரையும் புத்தரையும் குறிப்பிடுகிறார். அதற்கு அடுத்த பாடலில் அதற்கொரு விளக்கமளிக்கிறார். இவ்விரு பாடல்களும் வள்ளலாரின் சமய சமரசத்திற்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகத் திகழ்கின்றன.

திருஅருட்பா ஆறு திருமுறைகளில் முதல் ஐந்து திருமுறைகள் பொது. ஆறாம் திருமுறை சிறப்பு, முதல் ஐந்து திருமுறைகளில் பக்திக் கருத்துகள் மிகுதி.ஆறாம் திருமுறையில் சீவகாருண்யக் கருத்துகள் மிகுதி, சீர்திருத்தக் கருத்துக்கள் மிகுதி, சமரசக் கருத்துக்கள் மிகுதி.

திருஅருட்பா ஆறாம் திருமுறையில் ஈற்றில் உள்ளது அனுபவமாலை. நூறு பாடல்கள் அனுபவ மாலைக்குப்பின் சத்திய வார்த்தை என்ற தலைப்பில் ஒரு பாடல், சத்திய அறிவிப்பு நான்கு பாடல்கள், இவற்றோடு திருவருட்பா நிறைவு பெறுகிறது.

திருஅருட்பா ஆறாம் திருமுறையில் ஈற்றயலில் உள்ள அனுபவமாலை, பெயருக்கேற்ப அனுபவ நிலைகள் பலவற்றைக் கூறுகிறது. அனுபவமாலைப் பாடலொன்றில் வள்ளற்பெருமான் தன் ஆன்மநாயகனாகிய நடராசப்பெருமானின் பெயரைக் கூறும்போது அருகர் என்பேன் புத்தர் என்பேன் என்று கூறுகிறார். நாயக நாயகி பாவத்தில், தலைவி தோழிக்குக் கூறுவதாகப் பாடிய பாடல்கள். நடராசப் பெருமான் நாயகர், தலைவர். வள்ளற்பெருமான் நாயகி, தலைவி, மனம் தோழி, தில்லைச்சிற்றம்பலத்திலே திருநடனம் புரியும் உன்னுடைய கணவர் திருப்பெயரைச் சொல் என்று (மனமாகிய) தோழி கேட்கிறாள். தோழிக்குத் தலைவி பதிலுரைகிறாள். பதிலுரைப்பதாகப் பாடிய பாட்டுஇது.

**பெருகியபேர் அருளுடையார் அம்பலத்தே நடிக்கும்**
**பெருந்தகை என் கணவர் திருப் பேர்புகல் என் கின்றாய்**
**அருகர்புத்தர் ஆதி என்பேன் அயன் என்பேன் நாரா**
**யணன் என்பேன் அரன் என்பேன் ஆதிசிவம் என்பேன்**
**பருகுசதா சிவம் என்பேன் சத்திசிவம் என்பேன்**
**பரமம் என்பேன் பிரமம் என்பேன் பரப்பிரமம் என்பேன்**
**துருவுசுத்தப் பிரமம் என்பேன் துரியநிறை வென்பேன்**
**சுத்தசிவம் என்பன் இவை சித்துவிளை யாட்டே - 5801.**

பெருகிய பேரருளை உடையவர், தில்லைச் சிற்றம்பலத்திலே நடம் புரியும் பெருந்தகை, என்னுடைய கணவர் திருப்பெயரைச் சொல்லும்படிக்கேட்கிறாய்!

அருகர் என்பேன், புத்தர் என்பேன், அயன் என்பேன், நாராயணன என்பேன், அரன் என்பேன், ஆதிசிவம் என்பேன், சதாசிவம் என்பேன், சத்தி சிவம் என்பேன், பரமம் என்பேன், பிரமம் என்பேன், பரப்பிரமம் என்பேன், சுத்தப்பிரமம் என்பேன், துரிய நிறைவு என்பேன், சுத்த சிவம் என்பேன் - என்று அடுக்கடுக்காகக் கூறுகிறார்.

அயன் (பிரமன்), நாராயணன் (விஷ்ணு), அரன் (சிவன்), ஆதிசிவன், சதாசிவம், சக்திசிவம், பரமம், பிரமம், பரப்பிரம்மம், சுத்தப்பிரமம், துரிய நிறைவு, சுத்த சிவம் என்பனவெல்லாம் சைவ, வைணவ,வேதாந்த , சித்தாந்தப் பெயர்கள், அகச் சமயப் பெயர்கள், இவையெல்லாம் சிற்சபையில் நடம் புரியும் நாயகனாருக்குப் பொருந்தும். அருகர் என்றும் புத்தர் என்றும் சொல்லுகிறாயே அவை புறச்சமயப் பெயர்கள் நடராசப் பெருமானுக்குப் பொருந்துமா? என்று தோழி கேட்கிறாள். அதற்குத் தலைவி பதில்கூறுகிறாள். பதில் கூறுவதாக வள்ளலர் பாடுகிறார். புறச்சமயப்பேர் பொருந்துவதோ என்கிறாய்! பிற சமயத்தார் பெயரும் அவர் பெயரே, பித்தர் என்று பெயர் பெற்றவருக்கு வேறு எப்பெயர்தான் பொருந்தாது! பிற சமயப்பெரியோர்கள் பெயர் மட்டுமா, உன்பெயரும் என்பெயரும்கூட அவர் பெயரே, சிற்சபையில் என் கணவர் செய்யும் ஞானத்திருக்கூத்தைக் கண்டால்தான் நான்கூறுவது தெளிவாகத் தெரியும் என்று தோழி கூறுவதாக வள்ளலார் பாடுகிறார்.

**சிற்சபையில் நடிக்கின்ற நாயகனார் தமக்குச்**
**சேர்ந்தபுறச் சமயப்பேர் பொருந்துவதோ என்றாய்**
**பிற்சமயத் தார்பெயரும் அவர்பெயரே கண்டாய்**
**பித்தர் என்றே பெயர் படைத்தார்க் கெப்பெயர் ஒவ் வாதோ**

**அச்சமயத் தேவர்மட்டோ றின் பெயர் என் பெயரும்**
**அவர்பெயரே எவ்வுயிரின் பெயரும் அவர் பெயரே**
**சிற்சபையில் எம்கணவர் செய்யும் ஒரு ஞானத்**
**திருக்கூத்துக்கண்டளவே தெளியும் இது தோழி - 5802.**

சிதம்பரத்தில் எல்லா மதங்களின் தத்துவ உண்மைகளும் அடங்கியுள்ளன. “எச்சமய முடிவுகளும் திருச்சிற்றம்பலத்தே இருந்த “ என்று ஒரு பாடலில் (4142) வள்ளலார் குறிப்பிடுகிறார். எல்லாச் சமயங்களில் முடிவுகளும் திருச்சிற்றம்பலத்திலே இருக்கின்றன என்கிறார். “எச்சமயத்தவரும் வந்து இறைஞ்சா நிற்பர்“ என்று தாயுமானவரும் கூறியுள்ளார் (14- ஆகாரபுவனம், சிதம்பர ரகசியம்(12) “ அனைத்து உலகும் தொழும் தில்லை” “ எல்லோரும் இறைஞ்சு தில்லை “ என்று மாணிக்கவாசகரும் கூறுகிறார்(474;476).

சிதம்பரம் நடராஜரை வள்ளலார் அருகனாகக் காண்கிறார். புத்தராகவும் காண்கிறார். சமண சமயக் கடவுளாகவும் பௌத்த சமயக் கடவுளாகவும் காண்கிறார். பித்தனைவிடப் புத்தன் சிறியவனா? அருகன் சிறியவனா? பித்தன் என்று சொல்வதை இறைவன் ஏற்பானானால் புத்தன் என்று சொல்வதையும் அருகன் என்று சொல்வதையும் ஏற்க மாட்டானா? உலகில் உள்ள எல்லா உயிர்களின் பெயருமே இறைவன் பெயர்தான் என்கிறார். வள்ளலாரின் உள்ளம் எவ்வளவு விரிவாக உள்ளது என்பதை இதனால் அறியலாம்.

வள்ளலார் திருவுள்ளத்தில் புத்தருக்கும் ஓர் இடம் இருந்தது. வள்ளலார் திருவாக்கால் புத்தரும் போற்றிப்பாடப்பெற்றிருக்கிறார் என்பதைச் சைவ உலகமும் சமண பௌத்த உலகமும் சன்மார்க்க உலகமும் உணரவேண்டும்.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

தயவு